# வைப்பகம்

அறிவுத் தேடலின் மையம்

2026 ஏப்பிறல் - யூன் மலர் 10 இதழ் 04 - 06

ரூ. 80/-

02 நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைக் காப்பதில் வைப்புக் காப்புறுதியின் வகிபாகம்

10 பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை முதலீடுகளும் பொன்னான வாக்குறுதிகளும்

14 உலகளாவிய ஓய்வூதியச் சொத்துக்கள்: இலங்கையின் தற்போதைய நிலையும் முன்னோக்கிய பாதையும்

25 அதிக ஆதாயங்கள், மறைந்திருக்கும் இடர்நேர்வுகள்: சட்டவிரோத நிதித் திட்டங்களை அடையாளம்காணல்

ISSN 2737-9264

9 772737 926793

இக்கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் கட்டுரையாளர்களின் கருத்துக்களேயன்றி அவை இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

ஒரு பிரதியின் விலை ரூ.80.00
தபாற்செலவு ரூ.150.00

இலங்கை மத்திய வங்கி
தொடர்பூட்டல் திணைக்களம்



# நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைக் காப்பதில் வைப்புக் காப்புறுதியின் வகிபாகம்

**செல்வி. நிமானி குரே**
மூத்த உதவிப் பணிப்பாளர்
வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானத் திணைக்களம்

நவீன நிதியியல் முறைமைகளில் முக்கிய பாதுகாப்பு பொறிமுறையொன்றாக வைப்புக் காப்புறுதி பங்காற்றுகின்றது. நிதியியல் நிறுவனமொன்று முறிவடையும் சந்தர்ப்பத்தில், வைப்பாளர்கள் சேமிப்புகளை இழப்பதிலிருந்து இது அவர்களை பாதுகாக்கின்றது. அதேவேளை, இது பரந்தளவிலான பீதியினால் ஏற்படும் பணம் மீளப்பெறப்படும் இடர்நேர்வினைத் தணித்து, நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை வலுப்படுத்துகின்றது. கடந்த இரு தசாப்தங்களில், குறிப்பாக 2007-2008 உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்கு எதிர்வினையாற்றும் வகையில், வைப்புக் காப்புறுதி கட்டமைப்புக்களின் நோக்கெல்லையும் வலுவான தன்மையும் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்துள்ளன.

வைப்புக் காப்புறுதியின் தொழிற்பாட்டு பொறிமுறைகள், அதன் இன்றியமையாத அவசியம், உலகளாவிய முறைமைகளின் வடிவமைப்பு மற்றும் இலங்கையின் வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் பரிணாமம் என்பவற்றினை இக்கட்டுரையானது விளக்குகின்றது. மேலும், இது உலக வங்கியினால் ஆதரவளிக்கப்படும் நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட அண்மைய சீர்திருத்தங்களை மேலும் ஆராய்ந்து, பன்னாட்டு நியமங்களுடன் அணிசேரும் வகையில் இலங்கை அதன் வைப்புக் காப்புறுதிக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு தற்போது முன்னெடுக்கும் முயற்சிகள் பற்றிய நுண்நோக்குகளுடன் முடிவுறுகின்றது.

## 1. வைப்புக் காப்புறுதி பற்றிய எண்ணக்கருவினை விளங்கிக்கொள்ளுதல்

நிதியியல் நிறுவனங்கள் பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை சேகரித்து, அவற்றை வியாபாரங்களுக்கும் தனிநபர்களுக்கும் கடனாக வழங்குவதனூடாக இந்நிதியங்களை உற்பத்தித்திறன்மிக்க பயன்பாடுகளாக வழிப்படுத்துவதன் மூலம் நவீன பொருளாதாரங்களில் முக்கிய பங்காற்றுகின்றன. இச்செயல்முறையானது முதலீட்டிற்கும், நுகர்விற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் ஆதரவளிக்கின்றது. நிதியியல் நிறுவனங்கள் வைப்புக்களில் ஒரு பகுதியை மாத்திரம் திரவ ஒதுக்குகளாக வைத்திருக்கும் அதேவேளை ஏனைய பகுதியை கடன்பெறுநர்களுக்கு வழங்கி, பாகம்பிரித்தல் ஒதுக்கீடொன்றின் அடிப்படையில் தொழிற்படுகின்றது.

இந்த முறைமையானது, நிதியியல் நிறுவனங்கள் மீது பொதுமக்கள் நம்பிக்கை பேணப்படும் வரை செயல்திறன்மிக்க வகையில் தொழிற்படுகின்றது. அத்தகைய நம்பிக்கை பலவீனமடையும் போது சிக்கல்கள் எதிர்கொள்ளப்படுகின்றன. நிதியியல் நிறுவனமொன்று நிதியியல் ரீதியான சிரமங்களை எதிர்கொள்வதாக கருதப்படும் போது, வாடிக்கையாளர்களால் ஒரே நேரத்தில் வைப்புக்கள் மீளப்பெறப்படலாம். இத்தகைய

சூழ்நிலைகளில், அடிப்படையிலேயே கடன் தீர்க்கும் இயலாற்றலிலுள்ள நிறுவனங்கள்கூட திரவத்தன்மை நெருக்கடிகளுக்கு உள்ளாகலாம். வைப்புக்கள் இவ்வாறு பெருமளவில் மீளப்பெறப்படுதலானது வங்கித் திரவத்தன்மையை இழக்கும் நிலை என குறிப்பிடப்படுகின்றது.

நிதியியல் நிறுவனமொன்று முறிவடைந்தாலும், வைப்பாளர்களின் நிதியங்கள் குறிப்பிட்ட வரையறை வரை பாதுகாக்கப்படும் என உத்தரவாதமளிப்பதன் மூலம் அத்தகைய இடர்நேர்வுகளை தணிப்பதற்காக வைப்புக் காப்புறுதி அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த உத்தரவாதமானது, பீதியினால் ஏற்படும் மீளப்பெறுகைகளின் சாத்தியக்கூறினைக் குறைக்கின்றது.

பாரிய நிதியியல் நெருக்கடிகளின் போது வைப்புக் காப்புறுதியின் முக்கியத்துவத்தினைக் காணக்கூடியதாகவிருந்தது. டயமன்ட் மற்றும் டிப்விக் (1983) என்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது, ஏனையவர்கள் தமது நிதியங்களை மீளப்பெறுகின்றனர் என்ற வைப்பாளர்களின் அச்சத்தினால் வங்கி முறிவடைதல்கள் தூண்டப்படும் என எடுத்துக்காட்டியது. வைப்புக் காப்புறுதியானது இச்சுழற்சி வட்டத்தினை முறியடிப்பதற்கு உதவியளித்து, அதன் மூலம் நிதியியல் நிறுவனங்கள் மீதான நம்பிக்கையை மீளவலுப்படுத்துகின்றது.

வைப்புக் காப்புறுதி மூன்று முக்கிய நோக்கங்களை நிறைவுசெய்கின்றது:

- வீட்டலகுகள் மற்றும் சிறிய தொழில்கள் உள்ளடங்கலாக, சிறிய வைப்பாளர்களைப் பாதுகாத்தல்.
- வங்கி முறிவடைதல் இடர்நேர்வினை குறைத்தல் மற்றும் நிதியியல் கசிவுத்தாக்கங்களைத் தடுத்தல்.
- நிதியியல் நிறுவனங்கள் முறிவடையும் போது ஒழுங்கான தீர்மான செயல்முறைகளுக்கு ஆதரவளித்தல்.

நவீன வைப்புப் காப்புறுதி முறைமைகள், காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களுக்கு உரியகாலத்தில் மீளளிப்பினை வழங்குவதை உறுதிசெய்வதன் மூலமோ அல்லது காப்புறுதி செய்யப்பட்ட வைப்புகளை வளம்பெறத்தக்க நிதியியல் நிறுவனங்களுக்கு மாற்றுவதை வசதியளிப்பதன் மூலமோ நிதியியல் நிறுவனங்களின் முறிவடைதலை முகாமைசெய்வதில் முக்கிய பங்காற்றுகின்றன. இது கசிவுத்தாக்கங்களை குறைப்பதற்கும் நிதியியல் உறுதிப்பாட்டினை பேணுவதற்கும் உதவுகின்றது. அத்தகைய பொறிமுறைகள் பீதியினால் தூண்டப்படும் மீளப்பெறுகைகளை குறைத்து, அத்தியாவசிய நிதியியல் சேவைகளின் தொடர்ச்சியை உறுதிசெய்து, பரந்தளவிலான சந்தை இடையூறுகளை கட்டுப்படுத்துகின்றன.

எனினும், வைப்புக் காப்புறுதி முறைமைகள் மிகுந்த கவனத்துடன் வடிவமைக்கப்பட வேண்டும். மிகையான காப்பீடுகள், தார்மீக அபாயம் என அறியப்படும் இடர்நேர்வுமிக்க நடத்தைகளில் நிதியியல் நிறுவனங்களை ஈடுபட ஊக்குவிக்கலாம். இதற்கான தீர்வினைக் காண்பதற்காக, பெரும்பாலான முறைமைகள் காப்பீட்டு வறையரைகளை விதிப்பதுடன், வைப்புக் காப்புறுதியை முன்மதியுடைய மேற்பார்வையுடனும் ஒழுங்குமுறைப்படுத்தலுடனும் ஒருங்கிணைக்கின்றன. இந்த அணுகுமுறையானது, சந்தை ஒழுக்கத்துடனும் வலுவான இடர்நேர்வு முகாமைத்துவத்துடனும் வைப்பாளர் பாதுகாப்பினை சமநிலைப்படுத்துகின்றது.

## 2. வைப்புக் காப்புறுதியின் தொழிற்பாட்டு இயக்கவாற்றல்

நியாயாதிக்க வேறுபாடுகளுக்கு மத்தியில், வைப்புக் காப்புறுதி முறைமைகள் வைப்பாளர் பாதுகாப்பினையும் நிதியியல் உறுதிப்பாட்டினையும் மேம்படுத்தும் மைய பண்புகளைக் கொண்டுள்ளன. செயல்திறன்மிக்க திட்டங்கள் பொதுமக்கள் நம்பிக்கையைப் பேணுவதோடு, நிதியியல் நிறுவனங்கள் முன்மதியுடன் இடர்நேர்வுகளை ஏற்க ஊக்குவித்து, நிதியியல் துறையின் தங்குதடையற்ற தொழிற்பாட்டினை உறுதிசெய்கின்றன.

காப்பீட்டின் நோக்கெல்லை, வைப்புக் காப்புறுதிவழங்குநர்களின் தத்துவங்கள், நிதியிடல் ஏற்பாடுகள் மற்றும் நிர்வாக நடைமுறைகள் என்பவற்றை தெளிவாக குறித்துரைக்கின்ற தெளிவானதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான சட்டவாக்கங்கள் மூலம் ஏற்பாடுசெய்யப்படும் வலுவான சட்ட அடித்தளம் மிகவும் முக்கியமானதாகும். அத்தகைய தெளிவான, வைப்புக் காப்புறுதி திட்டத்தின் தொழிற்பாடுகளின் வெளிப்படைத்தன்மை, நடைமுறைப்படுத்தத்தக்கதன்மை மற்றும் ஒத்திசைவாந்தன்மை என்பவற்றை உத்தரவாதமளிக்கின்றது. பொதுவாக, காப்பீட்டு வரையறைகள் அநேகமான சிறிய வைப்பாளர்களை முழுமையாக பாதுகாப்பதற்கு நிர்ணயிக்கப்படுகின்ற அதேவேளை, பாரியளவிலான வைப்புக்கள் ஓரளவான இடர்நேர்விற்கு உட்படுத்தப்பட்டு, சந்தை ஒழுக்கத்தினைப் பாதுகாக்கின்றது.

வைப்புக் காப்புறுதிப் பொறிமுறையானது, அதன் உறுப்பு நிறுவனங்களிடமிருந்து நிகழ்வுக்கு முன்னரான நிதியிடல் மாதிரியினூடாக நிதியங்களை முன்கூட்டியே ஒன்றுதிரட்டுவதனூடாக செயல்படுத்தப்படுவதன் மூலம், வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் உறுப்பு நிறுவனங்கள் வைப்புக் காப்புறுதி நிதியத்திற்கு கிரமமான கட்டுப்பணங்களை பங்களிக்கின்றன. இந்நிதியங்கள், திரவத்தன்மையை பேணவும் மூலதனத்தை பாதுகாக்கவும் முன்மதியுடன் முதலீடுசெய்யப்பட்டு, சாத்தியமான ஈடளிப்புக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான தயார்நிலையை உறுதிசெய்கின்றன. பல நவீன கட்டமைப்புகள் இடர்நேர்வு அடிப்படையிலான கட்டுப்பண முறைமைகளைப் பயன்படுத்தி, அதிக இடர்நேர்வுமிக்க நிதியியல் நிறுவனங்களை விகிதசமமாக அதிக கட்டுப்பணங்களை செலுத்துவதற்குத் தேவைப்படுத்தி, இதன் மூலம் வலுவான இடர்நேர்வு முகாமைத்துவத்தையும் சமத்துவமான செலவுப் பரம்பலை ஊக்குவிக்கின்றன.

காப்புறுதி செய்யப்பட்ட வைப்புகளுக்கான மீளளிக்கும் வேகமானது, வைப்பாளர் நம்பிக்கையைப் பேணுவதற்கு இன்றியமையாததாகின்றது. பன்னாட்டு சிறந்த நடைமுறைகளின் பிரகாரம், குறிப்பாக நிதியியல் அழுத்த காலப்பகுதியில், காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களின் உரிமைக்கோரல்களை 7 முதல் 20 வேலை நாட்களுக்குள் செலுத்துவதானது மிகவும் முன்மதியுடையதாகும். வைப்புக் காப்புறுதியானது, ஈடளிப்பினை வழங்குவதன் மீது மாத்திரம் கவனம் செலுத்தும் எளிமையான "ஈடளிப்பை வழங்கும்" மாதிரிகளிலிருந்து, தீர்மான செயல்முறைகளிலும் பங்கேற்கும் "ஈடளிப்புடன் சேர்ந்த சேவைகள்", "இடர்நேர்வினைக் குறைத்தல்" மற்றும் "நட்டத்தினைக் குறைத்தல்" கட்டமைப்புகளாக பொறுப்பாணைகள் பரிணாமமடைந்து, இதன் மூலம் நெருக்கடி முகாமைத்துவத்தையும் நிதியியல் உறுதிப்பாட்டினையும் மேலும் வலுப்படுத்தப்படுகின்றன.

## 3. பன்னாட்டு அபிவிருத்திகளும் தரநியமங்களும்

வைப்புக் காப்புறுதியானது அது அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து குறிப்பிடத்தக்களவில் பரிணாம வளர்ச்சியடைந்துள்ளது. 1933இல் ஏற்பட்ட பெரும் மந்தத்தினைத் தொடர்ந்து,/பெடரல் டெபாசிட் இன்சூரன்ஸ் கோப்பரேசனை நிறுவி இவ்வெண்ணக்கருவின் முன்னோடியாக அமெரிக்கா விளங்கியது. அன்றுமுதல், பல முன்னேற்றமடைந்த மற்றும் தோற்றம்பெற்றுவரும் பொருளாதாரங்களாலும் வைப்புக் காப்புறுதி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பன்னாட்டு ஒருங்கிணைப்பில் முக்கிய முன்னேற்றமொன்றாக, 2002இல் சுவிட்சர்லாந்தின் பாசலில் பன்னாட்டு வைப்புக் காப்புறுதியாளர்கள் அமைப்பு (IADI) நிறுவப்பட்டது. பன்னாட்டு வைப்புக் காப்புறுதியாளர்கள் அமைப்பானது, பேசல் வங்கி மேற்பார்வைக் குழுவுடன் இணைந்து, செயல்திறன்மிக்க வைப்புக் காப்புறுதி முறைமைகளுக்கான அடிப்படை கோட்பாடுகளை உருவாக்கி, முதன்முதலில் 2009இல் வெளியிட்டதுடன், டிஜிட்டல் இடர்நேர்வுகள் மற்றும் நிதியியல் துறை அழுத்தங்கள் என்பவற்றிலிருந்தான பாடங்கள் உள்ளடங்கலாக, அண்மைய நிதியியல் துறை மாற்றங்களை கையாள்வதற்கு, 2014ஆம் மற்றும் 2025ஆம் ஆண்டுகளில் திருத்தியது.

இந்த அடிப்படை கோட்பாடுகள் சட்டக் கட்டமைப்புக்கள், நிதியிடல், காப்பீடுகள், ஆளுகை, தொழிற்பாட்டுத் தயார்நிலை, நெருக்கடியின் போதான ஒருங்கிணைப்பு மற்றும் தீர்மான நிதியளித்தல் என்பவற்றிற்கான வழிகாட்டுதல்களை வழங்குகின்றன. இவை, நிதியியல் துறை மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாடுகளின் நிதியியல் முறைமைகளை மதிப்பீடுசெய்வதில் பன்னாட்டு நாணய நிதியத்தினாலும் உலக வங்கியினாலும் பரவலாக பயன்படுத்தப்படுகின்றன.

தற்போதைய உலகளாவிய நடைமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- மேம்படுத்தப்பட்ட சட்டக் கட்டமைப்புக்கள் மற்றும் தொழிற்பாட்டு சுயாதீனத்தன்மை.
- விரிவுபடுத்தப்பட்ட மற்றும் போதுமானளவு மூலதனமாக்கப்பட்ட வைப்புக் காப்புறுதி நிதியங்கள்.
- இடர்நேர்வு உணர்திறன் கொண்ட கட்டுப்பணக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தல்.
- டிஜிட்டல் உட்கட்டமைப்புக்கள் மூலம் துணையளிக்கப்பட்ட விரைவுபடுத்தப்பட்ட ஈடளிப்புச் செயன்முறைகள்.
- தீர்மான அதிகாரிகளுடனான நெருக்கமான ஒருங்கிணைப்பு.
- நிதியியல் முறிவடைதலை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் இறுதியாக வழங்கப்படும் நிதியியல் ஆதரவு உள்ளடங்கலாக அவசரகால நிதியிடல் பொறிமுறைகள்.


2007-2008 உலகளாவிய நிதியியல் நெருக்கடி, பல எண்ணிக்கையிலான சீர்திருத்தங்களை துரிதப்படுத்தியது. அண்மைய நிதியியல் துறை அழுத்தங்களின் நிகழ்வுகள், தயார்நிலை, நெருக்கடியின் போதான ஒத்திகை பயிற்சிகள் மற்றும் டிஜிட்டல் தாக்குப்பிடிக்குந்தன்மை என்பவற்றின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்தியுள்ளன.

## 4. இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்

### 4.1 சட்டக் கட்டமைப்பும் வரலாற்று ரீதியான பரிணாம வளர்ச்சியும்

இலங்கை 1987இல் தன்னார்வ வைப்புக் காப்புறுதி ஏற்பாட்டினை அறிமுகப்படுத்தியது. 2010இல், 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் கட்டாயமான இலங்கை வைப்புக் காப்புறுதி திட்டம் நிறுவப்பட்டதன் மூலம் முக்கிய முன்னேற்றமொன்று ஏற்பட்டதுடன், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் என்பவற்றை 2010 முதல் இத்திட்டத்தின் கட்டாய உறுப்பினர்களாவதற்கு தேவைப்படுத்தியது. இத்திட்டமானது, சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினூடாக தொழிற்படுத்தப்பட்டு, வைப்புக் காப்பீடு, கட்டுப்பண சேகரிப்பு மற்றும் நிதிய நிர்வாகம் என்பவற்றிற்கான தெளிவான சட்ட அடிப்படையை வழங்கியது. இந்த அபிவிருத்தியானது, வைப்பாளர்களின் பாதுகாப்பினை மேம்படுத்தியதுடன், இலங்கையின் நிதியியல் முறைமையை பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் அணிசேரச்செய்தது.


2013இல், வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் பெயர், அதன் திரவத்தன்மை ஆதரவு தொழிற்பாட்டினை பிரதிபலிக்கும் வகையில் மாற்றப்பட்டது. 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை முறைசார்ந்ததாக்கியதுடன், அதன் பொறுப்பாணையை விரிவுப்படுத்தியது. தற்போது, இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டமானது "ஈடளிப்புடன் சேர்ந்த சேவைகள்" மாதிரியின் கீழ் தொழிற்பட்டு, உறுப்பு நிறுவனங்களின் உரிமம் இரத்துசெய்யப்படுவதன் மீது காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களுக்கு ஈடளிப்பு வழங்குவதற்காக மாத்திரமன்றி, தீர்மான செயல்முறைகளின் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை கைமாற்றல் செய்வதற்கு வசதியளிக்கின்ற நிதியியல் ஆதரவினை வழங்குவதற்கும் அதனை இயலச்செய்துள்ளது. இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டமானது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் செயற்படுவதோடு, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் என்பவற்றை உள்ளடக்கி இலங்கை மத்திய வங்கியின் வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டு முகாமைசெய்யப்படுகின்றது.



## 4.2 காப்பீட்டு வரையறையும் நிதியக் கட்டமைப்பும்

தற்போதைய காப்பீட்டு வரையறையானது, நிலவுகின்ற செலாவணி வீதங்களில் மாற்றம் செய்யப்படும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட வைப்புகளுக்கு ஏற்புடைய நிறுவனமொன்றின் வைப்பாளரொருவருக்கு ரூ. 1,100,000 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உறுப்பு நிறுவனங்கள், அதாவது, உரிமம்பெற்ற வங்கிகளுக்கான காலாண்டு மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான மாதந்த கட்டுப்பணங்களை கிரமமாக அனுப்புகின்ற, நிகழ்வுக்கு முன்னரான நிதியிடல் அணுகுமுறையொன்றினை இலங்கை வைப்புக் காப்புறுதி திட்டம் ஈடுபடுத்துகின்றது. இந்த கட்டமைப்பானது ஒதுக்குகளின் தொடர்ச்சியான திரட்டலை உறுதிப்படுத்தி, திரவத்தன்மை தயார்நிலையை மேம்படுத்தி, உரியகாலத்தில் வைப்பாளர் இழப்பீட்டிற்கான திட்டத்தின் இயளலவை வலுப்படுத்துகின்றது. இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டமானது, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை அதாவது, சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, த ஸ்ராண்டட் கிறடிற் பினான்ஸ் லிமிட்டெட், ரி.கே.எஸ் பினான்ஸ் லிமிட்டெட், த பினான்ஸ் கம்பனி பிஎல்சி, ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிட்டெட் மற்றும் ஸ்வர்ணமஹால் பினான்ஸியல் சேர்விசர்ஸ் பிஎல்சி மற்றும் பிம்புத் பினான்ஸ் பிஎல்சி போன்றவற்றின் வைப்பாளர்களுக்கு இழப்பீடு வழங்கிய நடைமுறைசார் அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், முகவராண்மை வங்கித்தொழில் ஏற்பாடுகளினூடாக ஈடளிப்பு வினைத்திறன்மிக்கத்தன்மையை மேம்படுத்தி, இதன் மூலம் எதிர்கால எதிர்பாரா நிலைமைகளுக்கான தொழிற்பாட்டு ரீதியான தயார்நிலையையும் வலுப்படுத்திக்கொண்டுள்ளது.




## 4.3 நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் கருத்திட்டம்

அண்மைய பேரண்டப்பொருளாதார சவால்களுக்கு மத்தியில் உலக வங்கியின் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பானது, இலங்கையின் நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்குந்தன்மையை வலுவூட்டும் நோக்கில் உருவாக்கப்பட்ட உபாய ரீதியான முன்முயற்சியான நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் கருத்திட்டத்திற்கான நிதியுதவியை வழங்குகின்றது. ஏறத்தாள ஐக்கிய அமெரிக்க டொலர் 150 மில்லியன் நிதியுடன் அங்கீகரிக்கப்பட்ட இத்திட்டமானது, நிதியியல் பாதுகாப்பு வலையை வலுப்படுத்துவதற்கும், நிதியியல் முறைமையில் பொதுமக்கள் நம்பிக்கையை உயர்த்துவதற்கும் தேவையான கட்டமைப்புசார் சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிக்கின்றது.

நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் கருத்திட்டமானது, நிறுவனசார் இயலளவை கட்டியெழுப்புதல், நிதியியல் தயார்நிலையை மேம்படுத்துதல், திருத்தப்பட்ட பன்னாட்டு வைப்புக் காப்புறுதியாளர்கள் அமைப்பின் மையக் கோட்பாடுகளில் எடுத்துரைக்கப்பட்டவாறு பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் அணிசேர்ந்திருத்தல் என்பவற்றின் ஊடாக இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை மேம்படுத்துவதன் மீது கவனம் செலுத்துகின்றது.

இத்திட்டம் மூன்று முக்கிய கூறுகளை கொண்டுள்ளது:

- வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை உச்சப்பயனடையசெய்தல்: காப்பீட்டு இயலளவை மேம்படுத்துவதற்கு இலங்கை வைப்புக் காப்புறுதி திட்டத்தின் ஒதுக்குகளை அதிகரித்தல்.
- இலங்கை மத்திய வங்கிக்கான நிறுவனசார் இயலளவினை கட்டியெழுப்புதல்: பன்னாட்டு வைப்புக் காப்புறுதியாளர்கள் அமைப்பின் மையக் கோட்பாடுகளுடன் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை சிறந்தமுறையில் அணிசேர்ப்பதற்காக, வைப்புக் காப்புறுதியுடன் தொடர்புடைய இலங்கை மத்திய வங்கியின் நிர்வாக மற்றும் தொழிற்பாட்டு இயலளவுகளை மேம்படுத்தும் தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.

- கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தலும் மேற்பார்வைசெய்தலும்: நிதியியல் முகாமைத்துவம், பெறுகை, சமூக மற்றும் சூழல் ரீதியான இடர்நேர்வு முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, அத்துடன் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் போன்ற உலக வங்கியின் ஏற்புடையதான தரநியமங்களுடன் இசைந்துசெல்லும் வகையில் நிறைவேற்றம், மேற்பார்வை மற்றும் இணங்குவித்தல் கண்காணிப்பு என்பவற்றிற்கு ஆதரவளித்தல்.

நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொள்கை அடிப்படையிலான மேம்பாடுகள்

நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் கருத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்றாக, உலக வங்கியுடன் உடன்பட்ட குறிப்பான சீர்திருத்த மைற்கல்களை அடைந்துக்கொள்வதற்காக நிதிய பகிர்ந்தளித்தல்களை இணைக்கும் கொள்கை அடிப்படையிலான மேம்பாடுகளை நிறைவுசெய்தல் காணப்படுகின்றது. நிதியிடலானது, வெறுமனே வரவுசெலவுத் திட்ட ஆதரவினை வழங்குவதுடன் மாத்திரமல்லாமல், வைப்புக் காப்புறுதி இயலளவு மற்றும் ஆளுகை என்பவற்றின் கணிசமானளவு முன்னேற்றங்களுக்கு ஆதரவளிப்பதை இது உறுதி செய்கிறது.

இந்த மைற்கல்கள், சிறப்பான நிதியிடல் விகிதங்கள், மேம்படுத்தப்பட்ட தொழிற்பாட்டுக் கட்டமைப்புக்கள், முன்னேற்றமடைந்த ஈடளிப்பு செயன்முறைகள் மற்றும் பன்னாட்டு நியமங்களுடனான இணங்குவிப்பு போன்ற அளவிடக்கூடியவாறான முன்னேற்றங்கள் மீது கவனம் செலுத்துகின்றன.

முக்கிய அபிவிருத்தி துறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

**தெளிவான நிறுவனசார் ஏற்பாடுகள்:** பொறுப்புக்கூறுந்தன்மையை வலுப்படுத்தும் நோக்கில், இலங்கை மத்திய வங்கிக்குள் வெவ்வேறான ஊழியர் மற்றும் அறிக்கையிடல் பிரிவுகளுடன் பிரத்தியேக வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மான தொழிற்பாடுகளை நிறுவுதல்.

**அரசிறைசார் நிதியியல் ஆதரவுப் பொறிமுறை:** அழுத்தமிக்க காலப்பகுதிகளின் போது இலங்கை வைப்புக் காப்புறுதி திட்டத்திற்கான அரசாங்க ஆதரவினை உத்தரவாதமளிப்பதற்காக, இலங்கை மத்திய வங்கிக்கும் நிதி அமைச்சுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினை முறைசார்ந்ததாக்குதல்.

**பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டுக் கொள்கை:** வருவாயை மேம்படுத்துவதற்காக பாதுகாப்பு மற்றும் சொத்து பன்முகப்படுதல் என்பவற்றின் சமநிலையைப் பேணும் முதலீட்டுக் கொள்கையொன்றினை பின்பற்றும் அதேவேளை, மூலதனத்தைப் பாதுகாத்தல்.

**கட்டுப்பணம் சேகரித்தல் மற்றும் நிலைபெறுந்தன்மை:** நிலைப்பெறத்தக்க கட்டுப்பண முறைமையியல்களையும் ஒதுக்கு வளர்ச்சியையும் உறுதிசெய்வதற்காக புதிய வழிகாட்டுதல்களை வெளியிடுதல்.

**மேம்பட்ட வெளிப்படைத்தன்மை மற்றும் பொதுமக்களுக்கான தகவல்:** உறுப்பு நிறுவனங்கள் அவற்றின் வைப்புக் காப்புறுதி உறுப்புரிமை மற்றும் காப்பீடு தொடர்பான தரப்படுத்தப்பட்ட தகவல்களை வெளியிடுவதற்கு தேவைப்படுத்தல்.

**பொதுமக்கள் விழிப்புணர்வு மற்றும் நிதியியல் அறிவு:** இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் மீதான பொதுமக்கள் விழிப்புணர்வின் ஏற்கனவேயுள்ள மட்டத்தினை மதிப்பீடு செய்வதற்கான முதலாவது நாடளாவிய ரீதியிலான அளவீட்டினை நடாத்துதலும் வைப்பாளர்களுக்கு இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் பற்றி அறிவூட்டும் நீண்டகால பொதுமக்கள் விழிப்புணர்வு உபாயங்களை உருவாக்குதலும்.

**எதிர்பாரா திட்டமிடல்:** பல முறிவடைதல்கள் ஏற்படும் சூழலில், பாரியளவிலான அல்லது சமகாலத்தில் இடம்பெறும் ஈடளிப்புகளை முகாமைசெய்வதற்கான திட்டங்களை உருவாக்குதல்.

**தொழிற்பாட்டுத் தயார்நிலை:** வைப்பினை மீளளிப்பதற்கான வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்துதலும் ஈடளிப்பு வினைத்திறன் மற்றும் தயார்நிலை என்பவற்றை மேம்படுத்துவதற்கான மாதிரிப் பயிற்சிகளை நடாத்துதலும்.

## 5. ஒப்பீட்டுப் பகுப்பாய்வும் எதிர்காலப் பணிப்புரைகளும்

உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் வைப்புக் காப்புறுதி கட்டமைப்பானது சட்டரீதியான தெளிவை நிறுவுதல், அதன் பொறுப்பாணையை விரிவுபடுத்துதல் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 150 மில்லியன் உலக வங்கி நிதியிடல் வசதியொன்றினால்

ஆதரவளிக்கப்பட்ட நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் சீர்திருத்தங்களை முன்னேற்றுதல் என்பவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இம்முயற்சிகள், பன்னாட்டு ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளுக்கமைய இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கமைவாக தாக்குப்பிடிக்குந்தன்மையையும் நிறுவனசார் ஆற்றல்வாய்ந்தத்தன்மையையும் மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளன.

சீர்திருத்த முன்முயற்சிகள் நிறுவனசார் இயலளவு, தொழிற்பாட்டுத் தயார்நிலை மற்றும் நிதியியல் நிலைபெறுந்தன்மை என்பவற்றை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன. இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டமானது, இடர்நேர்வு அடிப்படையிலான கட்டுப்பண முறைமைகளை நோக்கி முன்னேறி வருவதுடன், தீர்மான செயன்முறைகளுக்குள் அதன் வகிபாகத்தினை தெளிவுபடுத்தி, நிர்வாகம், பொறுப்புக்கூறுந்தன்மை அத்துடன் வெளிப்படைத்தன்மை என்பவற்றை மேம்படுத்துகின்றது.

இருப்பினும், அதிகம் அபிவிருத்தியடைந்த வைப்புக் காப்புறுதி முறைமைகளுடன் முழுமையான ஒத்திசைவை அடைவதற்கு மேலதிக மேம்பாடுகள் அத்தியாவசியமையாகும். முன்னுரிமைகளானவை, வெளிநாட்டு வைப்புக் காப்புறுதிவழங்குநர்களுடன் எல்லை கடந்த ஒத்துழைப்பை மீளவலுப்படுத்துதல், இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரித்தல், அத்துடன் நெருக்கடியின் போதான தயார்நிலை மற்றும் தொடர்பாடல் உபாயங்களை மேம்படுத்துதல் போன்றவற்றை உள்ளடக்குகின்றன. நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் கருத்திட்ட சீர்திருத்தங்களின் தொடர்ச்சியான நடைமுறைப்படுத்தலானது, முதன்மையாக "ஈடளிப்பை வழங்கும்" பொறிமுறையிலிருந்து நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு முன்கூட்டிய செயற்பாடுசார்ந்ததும் ஒருங்கிணைந்ததுமான பங்களிப்பாளராக இலங்கை வைப்புக் காப்புறுதி திட்டத்தினை நிலைமாற்றுவதில் இன்றியமையாத பங்காற்றும்.

## 6. முடிவுரை

வைப்புக் காப்புறுதியானது, வைப்பாளர்களைப் பாதுகாப்பதற்கும் நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கும் அத்தியாவசியமாகும். இது நிதியியல் அழுத்தக் காலப்பகுதியின் போது ஏற்படும் பீதியினைக் குறைப்பதுடன், முறிவடைந்த நிதியியல் நிறுவனங்களை ஒழுங்காக முகாமைசெய்யவும் ஆதரவளிக்கின்றது. காலப்போக்கில், வைப்புக் காப்புறுதி முறைமைகள் மேலும் நவீனத்துவம் வாய்ந்ததாகவும் தேசிய நிதியியல் பாதுகாப்பு வலையுடன் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டதாகவும் மாறியுள்ளன.

பன்னாட்டு வைப்புவழங்குநர்கள் அமைப்பினால் பிரகடனப்படுத்தப்பட்ட பன்னாட்டு தர நியமங்கள், குறிப்பாக 2009இல் முதன்முறையாக வெளியிடப்பட்டு, 2014இல் மற்றும் 2025இல் திருத்தப்பட்ட மையக் கோட்பாடுகள், வைப்புக் காப்புறுதியின் செயல்திறன்மிக்கத்தன்மையை மதிப்பீடு செய்வதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய கட்டமைப்பொன்றினை வழங்குகின்றன.

இலங்கையின் வைப்புக் காப்புறுதித் திட்டமானது, குறிப்பாக 2023இல் சட்டவாக்கச் சீர்திருத்தங்களினூடாகவும் உலக வங்கியினால் ஆதரவளிக்கப்பட்ட நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற மேம்பாடுகளினூடாகவும் கணிசமானளவு அபிவிருத்திக்குட்பட்டுள்ளது.

நிதியளித்தலின் போதுமானதன்மையை மேம்படுத்துவதற்கும், இடர்நேர்வு அடிப்படையிலான கட்டுப்பணங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், அரசிறை நிதியியல் ஆதரவுகளை நிறுவுவதற்கும், டிஜிட்டல் முறைமைகளிலிருந்து உச்சபயனடையச்செய்வதற்கும், நெருக்கடியின் போதான தயார்நிலையை மேம்படுத்துவதற்கும் அத்துடன் பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிப்பதற்குமான தொடர்ச்சியான முயற்சிகள் இலங்கை வைப்புக் காப்புறுதி திட்டத்தினை மேலும் வலுப்படுத்தும். சிறப்பாக கட்டமைக்கப்பட்டதும் போதுமானளவு மூலதனமயப்படுத்தப்பட்டதுமான வைப்புக் காப்புறுதி முறைமையொன்று, வைப்பாளர்களைப் பாதுகாப்பதோடு மாத்திரமல்லாமல், நிதியியல் முறைமை மீதான நீண்டகால நம்பிக்கையையும் மீளவலுப்படுத்துகின்றது■

## உசாத்துணைகள்


- Basel Committee on Banking Supervision. (2010). Core principles for effective deposit insurance systems. Bank for International Settlements.
- Diamond, D. W., & Dybvig, P. H. (1983). Bank runs, deposit insurance, and liquidity. Journal of Political Economy, 91(3), 401–419.
- Financial Stability Board. (2023). Resolution framework assessment updates. FSB.

- International Association of Deposit Insurers. (2009). Core principles for effective deposit insurance systems. IADI.
- International Association of Deposit Insurers. (2014). Core principles for effective deposit insurance systems (Revised). IADI.
- International Association of Deposit Insurers. (2025). Revised core principles for effective deposit insurance systems. IADI.
- International Monetary Fund & World Bank. (2011). Financial sector assessment program: Technical note on deposit insurance systems. IMF.
- Central Bank of Sri Lanka. (2024). Sri Lanka deposit insurance scheme annual report. CBSL.
- Banking (Special Provisions) Act No. 17 of 2023 (Sri Lanka).
- Monetary Law Act No. 58 of 1949 (Sri Lanka).
- World Bank. (2023). Sri Lanka Financial Sector Safety Net Strengthening Project (P180861). International Development Association.



# பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை முதலீடுகளும் பொன்னான வாக்குறுதிகளும்

**திரு. சசிந்து வன்னியாராச்சி**
மூத்த உதவிப் பணிப்பாளர்
வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

*நிதியியல் மோசடிகளும் ஏமாற்றுக்களும் வெறுமனே தனிமைப்படுத்தப்பட்ட சவால்கள் அல்ல; அவை, நிதியியல் முறைமை மீதான பொதுமக்களின் நம்பிக்கை, பொருளாதார தாக்குபிடிக்கும்தன்மை மற்றும் தேசிய அபிவிருத்தி போன்றவற்றுக்கான ஒட்டுமொத்த முறைமையைப் பாதிக்கும் அச்சுறுத்தல்களாகும்.*

1960களில், டச்சு குடியரசானது பிற்காலத்தில் “துலிப் மேனியா” என்று அறியப்பட்ட காலகட்டத்தை எதிர்கொண்டது. இக்காலப்பகுதியில், வர்த்தகப்படுத்தலுக்கும் ஊக வணிகத்திற்கும் அரிய வகையிலான துலிப் மலர் கிழங்குகள் மிகவும் பிரபல்யமடைந்து காணப்பட்டன. அவற்றின் விலைகள் கணிசமானளவில் அதிகரித்து, சில சமயங்களில் வீடுகளின் விலைகளை விடவும் மிகவும் அதிகமாகவிருந்தன. மக்கள் பெரும்பாலும் உண்மையான மலர்களைப் பெறும் நோக்கமின்றி, துலிப் மலர் நாற்றுக் கிழங்குகளுக்கான ஒப்பந்தங்களை வாங்கியும் விற்றும் வந்தனர். விலைகள் தொடர்ந்து உயர்ந்து கொண்டிருந்த வரை, இந்த உற்சாகம் நியாயமானதாக தோன்றியது. துலிப் மலர் கிழங்குகள் தொட்டுணரக்கூடியனவாகவும், அரியவகையாகவும் மற்றும் அவை உருவாக்கிய மலர்கள் பெறுமதிமிக்கவையாகவும் கருதப்பட்டன. எனினும், 1637இல், சந்தையின் மீது மக்களுக்கு நம்பிக்கை குறையத் தொடங்கியபோது, விலைகள் திடீரென சரிந்தன (கோல்ட்கர், 2007). இறுதியில், மலரைவிட அதனால் கற்றுக்கொண்ட பாடமே முக்கியமானதாக இருந்தது: மண்ணில் வளர்க்கப்படும் சொத்துகள்கூட யதார்த்தமற்ற நிதியியல் எதிர்பார்ப்புகளுக்கும் நீடிக்க முடியாத ஊக வாணிபத்திற்கும் மையமாக மாறக்கூடும்.

இவ்வரலாற்றுச் சம்பவத்தின் முக்கியத்துவம் தோட்டக்கலை பற்றியது அல்ல, மாறாக அது மனிதர்களின் நடத்தையைப் பற்றியதாகும். செல்வத்தை உறுதியுடனும் வேகமாகவும் அத்துடன் குறைந்தபட்ச இடர்நேர்வுடனும் உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையைச் சந்தைகள் அவ்வவ்போது மீண்டும் விதைக்கின்றன. காலப்போக்கில் அடிப்படைச் சொத்துக்கள் மாறக்கூடும், இருப்பினும் மனித மனநிலை மாற்றமின்றியே இருக்கின்றது.

தற்போதைய நிலையைப் பொறுத்தவரை, முதிர்ச்சியடைய நீண்ட காலம் எடுக்கும் பெருந்தோட்டப்பயிர் இனங்கள் மற்றும் குறுகிய வளர்ச்சிக் காலம் கொண்ட வர்த்தகப் பயிர்ச்செய்கை செயற்றிட்டங்கள் போன்றவற்றை ஈடுபடுத்துகின்ற வேளாண்மை முதலீட்டு ஏற்பாடுகளில் பங்கேற்குமாறு, அண்மைக் காலமாக இலங்கை மக்களில் சில வகுப்பினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகின்றது. இம்மரங்கள் பெரும்பாலும் கவர்ச்சிகரமானதாக இருக்கும். குறிப்பிட்ட

எண்ணிக்கையிலான மரங்கள் அல்லது வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் மீது உரித்து உரிமை பெறலாம் என்று முதலீட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். அதன்பின்னர் தொழில்சார் முகாமையாளர்கள் நடுதல், பராமரித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் போன்றவற்றை மேற்பார்வையிடுவார்கள். சில சந்தர்ப்பங்களில், ஆரம்பப் பங்களிப்பு செய்த சில மாதங்களுக்குள் வருமானம் கிடைக்கத்தொடங்கும் என எதிர்வுகூறப்படுகின்றது. இது போன்ற வேறுதிட்டங்களில், குறித்துரைக்கப்படும் முதிர்வுக் காலத்தின் இறுதியில் கணிசமான ஒரு தடவைக் கொடுப்பனவிற்கு வாக்குறுதியளிக்கப்படுகின்றது. முதலீட்டாளர்களுக்கு அவர்களின் முதலீடு பாதுகாப்பானதென்பதை உணர்த்தும் வகையில் சில நேரங்களில் மீள்கொள்வனவு உத்தரவாதங்கள் அல்லது நிலையான விலை ஏற்பாடுகள் காண்பிக்கப்படுகின்றன.

முதலீட்டாளர்கள் எதிர்வுகூறப்படும் ஆதாயத்தினால் மாத்திரமன்றி, வேளாண்மையுடன் தொடர்புடைய பரிச்சயத்தன்மை மற்றும் நம்பிக்கை என்பவற்றாலும் ஈர்க்கப்படுகின்றனர். அதன் புலப்படக்கூடிய தன்மையும் தெளிவானத் தன்மையும், மரபுசார்ந்த நிதியியல் சாதனங்களில் இல்லாத பாதுகாப்பு உணர்வை வழங்குகின்றன. கள விஜயங்கள் இந்நம்பிக்கையை வலுப்படுத்தலாமெனினும், ஒரே தாவரங்கள் பல பங்கேற்பாளர்களுக்குக் காண்பிக்கப்படலாம் என்பதால், தனிப்பட்ட சொத்துரிமையை உறுதிப்படுத்துவது கடினமாகின்றது. ஆழமான வேளாண் மரபுகளை கொண்ட சமூகத்தில், வளர்ந்துவரும் ஒரு செடியின் அடையாள சக்தி, நிதியியல் எதிர்வுகூறல்களை விடவும் அதிகமாக நம்பிக்கை ஊட்டக்கூடியதாக இருக்கும்.

ஆயினும், ஏனைய பெரும்பாலான துறைகளைக் காட்டிலும் வேளாண்மைத் துறை, உள்ளார்ந்தமான நிச்சயமற்றதன்மையால் ஆளப்படுகிறது. உயிரியல் செயன்முறைகள் நிதியியல் கால அட்டவணைகளுக்கு ஏற்ப இயங்காது. காலநிலை மாறக்கூடும், பீடைகளும் நோய்களும் முன்னறிவிப்பின்றி தோன்றக்கூடும், உற்பத்திச் செலவுகள் மாறிக்கொண்டே இருக்கும், மேலும் போக்குவரத்து அல்லது சந்தை நிலைமைகளும் எதிர்பாராத விதமாக மாறலாம். கவனமாக முகாமைத்துவம் செய்தாலும் கூட, அறுவடை மற்றும் விலையில் ஏற்படும் மாறுபாடு தவிர்க்கமுடியாத யதார்த்தமாகவே இருக்கின்றது.

எனவே, அடிப்படையான இடர்நேர்வுகளும் ஊகங்களும் வெளிப்படையாக விளக்கப்படாமல், நிலையான, முன்கணிக்கத்தக்க மற்றும் சராசரியை விடவும் அதிகமான ஆதாயத்தை வழங்கும் முதலீடுகளாக வேளாண்மைத் திட்டங்கள் முன்வைக்கப்படும் போது, சாத்தியமான முதலீட்டாளர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படுவது பொருத்தமானதாகும். நிதி முதலீடு செய்யப்பட்ட சில காலத்திலேயே வருமானம் கிடைக்கத் தொடங்கும் எனக் கூறப்படும் போது, அடிப்படை பொருளாதாரக் கேள்விகள் எழுகின்றன: அந்த அடிப்படையானச் செயற்பாடு மீளச்செலுத்தல்களையோ அல்லது வருமானத்தையோ ஆதரிக்கும் அளவுக்கு ஏற்கனவே போதுமான வருவாயை ஈட்டியுள்ளதா? சம்பந்தப்பட்ட சொத்து முதிர்ச்சியடைய காலம் வேண்டுமாயின், ஆரம்பக்கட்ட பகிர்ந்தளித்தலுக்கு எவ்வாறு நிதியளிக்கப்படுகின்றன? இன்னும் வளர்ந்துகொண்டிருக்கும் தாவரங்கள் தாமாகவே மாதாந்த காசுப்பாய்ச்சலை உருவாக்குவதில்லை. குறுகிய வளர்ச்சி காலத்தைக் கொண்ட பயிரிடல் முறைகளில், சில வாரங்களுக்குள் அறுவடை நடைபெறுவது உண்மையிலேயே சாத்தியமாக இருக்கலாம். இருப்பினும், பயிர் விரைவாக முதிர்ச்சி அடைவதால் மட்டும் விலை இடர்நேர்வு மறைந்துவிடுவதில்லை. காய்கறிகள் மற்றும் பிற விளைபொருட்களின் சந்தை விலைகள், பருவகால வழங்கல், பிராந்திய உற்பத்தி அளவுகள் மற்றும் கேள்வி நிலைமைகள் என்பவற்றைப் பொறுத்து தளம்பலுடன் காணப்படுகின்றன. அனைத்து முதலீட்டாளர்களுக்கும் மற்றும் காலப்போக்கிலும் வருமானங்கள் நிலையானதாகக் காட்டப்படும் போது, அத்தகைய மாறுபாடுகள் எவ்வாறு நீக்கப்பட்டுள்ளன என்று ஒரு பகுத்தறிவுள்ள முதலீட்டாளர் கேள்வி எழுப்புவது நியாயமானதாகும்.

நிலையான வேளாண் வருவாய் குறித்த உறுதிகளை மேலும் மதிப்பீடுசெய்வதற்கு, மற்றுமொரு சிந்தனையும் பயனுள்ளதாக இருக்கலாம். குறிப்பிட்டதொரு வேளாண் கட்டமைப்புத் தொடர்ந்து சிறப்பான மற்றும் நிலையான இலாபத்தை வழங்குகின்றது என்றால், அத்தகைய இலாப எல்லைகள் பரவலான விவசாய சமூகத்திலும் தெளிவாகக் காணப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கலாம். நாம் அறிந்ததைப் போன்று, தலைமுறை தலைமுறையாக விவசாயிகள் அதிக பெறுமதிகொண்ட பயிர்கள் என்று அழைக்கப்படுகின்ற பயிர்களை விடாமுயற்சியுடனும் அனுபவத்துடனும் பயிரிட்டு வந்துள்ளனர். இருப்பினும், வரலாற்று ரீதியாக அவர்களின் வருமானம் நிச்சயத்தன்மையை விட மாறிலிகளாலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒப்பாக, தொழில்சார் முகாமைத்துவத்தின் ஆதரவுடனும், பொது வெளிப்படுத்தல்

நியமங்களுக்கு உட்பட்டும், பாரியளவில் செயற்படும் தாபிக்கப்பட்ட பெருந்தோட்ட தொழில்முயற்சிகள், காலநிலை மற்றும் சந்தை நிலைமைகளினால் தமது செயலாற்றம் பாதிக்கப்படுவதாகத் தொடர்ந்தும் தெரிவிக்கின்றன. இத்துறை முழுவதும் சீராகக் கிடைக்கக்கூடிய அசாத்தியமான ஆதாயமின்மையானது வேளாண்மை இலாபகரமானதாக இருக்க வாய்ப்பிருந்தாலும், அது பொருளாதார அடிப்படைகளை மீறுவதில்லை என்பதைக் காட்டுகிறது.

இதனால் அனைத்து வேளாண் முதலீட்டு முன்முயற்சிகளும் நம்பகத்தன்மையற்றவை என்று பொருளல்ல. மாறாக, புத்தாக்கம், மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் வினைத்திறன்மிக்க வழங்கல் சங்கிலிகள் ஆகியவை உற்பத்தித்திறனையும் இலாபத்தையும் அதிகரிக்கச்செய்யலாம் எனினும், இத்துறைகளில் நமது நாடு ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை அடைந்தால் மாத்திரமே இது சாத்தியமாகும். எனினும், நிதியியல் கட்டமைப்பு உயிரியல் மற்றும் சந்தை நிதர்சனங்களிலிருந்து தொடர்பற்றதாகத் தோன்றும் போது கரிசனை எழுகிறது. பொதுவாக பொன்சி திட்டம் என்று குறிப்பிடப்படும் ஒரு வகையான நிதியியல் மோசடி காணப்படுகின்றது. இத்தகைய ஏற்பாடுகளில், முன்னைய பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்படும் வருமானமானது, அடிப்படைச் செயற்பாட்டினால் உருவாக்கப்படும் உண்மையான இலாபத்திலிருந்து பெறப்படாமல், புதிய பங்கேற்பாளர்களின் பங்களிப்புகளிலிருந்தே பெறுவிக்கப்படுகின்றது. புதிய நிதிய வரவு தொடரும் வரை இந்த மாதிரி நிலையானதாகத் தோன்றலாம். புதிய பங்களிப்புகளின் வரவு குறையும்போது, வாக்குறுதியளிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கு ஆதரவு வழங்குவதற்கு போதுமான உண்மையான வருமானம் இல்லாததால், அக்கட்டமைப்பினால் அவற்றை நிலைநிறுத்த முடியாது. இப்பிரச்சனையின் சாரம்சம் வேளாண்மை சார்ந்ததை விடவும் புள்ளிவிபரம் சார்ந்ததாக அமைகின்றது.

ஒரு நிறுவனம், அதன் மையச் செயற்பாடு அதற்கேற்ற வருவாயை ஈட்டுவதற்கு முன்பே, சீரான ஈடளிப்பை வழங்குவதாக உறுதியளித்தால், அந்த வேறுபாடு வேறொரு மூலத்திலிருந்துதான் வர வேண்டும். அம்மூலமானது முதன்மையாக மேலதிக முதலீட்டாளர்களை ஈர்ப்பதில் சார்ந்திருந்தால், அதன் நிலைபெறுதன்மை சந்தேகத்திற்குரியதாகிவிடும்.

வேளாண்மை சார்ந்த விபரிப்புக்கள், அறியாமலேயே இப் பலவீனத்தை மறைத்துவிடக்கூடும். பயிர்கள் காலப்போக்கில் மெதுவாக வளர்கின்றன. உண்மையான விளைச்சல், விற்பனை ஒப்பந்தங்கள் மற்றும் அடையப்பெற்ற விலைகள் ஆகியவற்றைத் தனிப்பட்ட முதலீட்டாளர்கள் சுயாதீனமாக மதிப்பிடுவது கடினமாக இருக்கலாம். கவனமாக ஏற்பாடு செய்யப்பட்ட களப் பயணம் நம்பிக்கையளிக்கக்கூடியதாக இருப்பினும், முக்கியமான கேள்வி பயிர்ச்செய்கையை மாத்திரம் சார்ந்ததல்ல, மாறாக காசுப் பாய்ச்சல் பற்றியதே ஆகும். முதலீட்டாளர்களின் வருமானம், நிரூபிக்கக்கூடிய விற்பனை வருவாயுடன் நேரடியாகப் பிணைக்கப்பட்டுள்ளதா, அல்லது அவை தொடர்ச்சியான மூலதன உட்பாய்ச்சல்களில் சார்ந்திருக்கின்றனவா?

ஆகையினால், இப்பின்னணியில், நிதியியல் அறிவு எளிய வினாக்களிலிருந்து தொடங்குகின்றது. பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டுவதற்கு யாருக்கு அதிகாரம் உள்ளது? கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் வெளிப்படையாகக் கிடைக்கின்றனவா? இடர்நேர்வுகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளனவா அல்லது எதிர்வுகூறப்பட்ட ஆதாயங்களுக்கே பெரும்பாலும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதா? வாக்குறுதியளிக்கப்பட்ட வருமானங்கள் வழங்கப்படும் காலமானது உற்பத்திச் சுழற்சிகளுடன் யதார்த்தமாகப் பொருந்துகிறதா? விளைச்சலில் ஏற்படும் மாறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும் ஒரே மாதிரியான வருமானம் வழங்கப்பட்டால், அறுவடை எதிர்பார்த்தபடி அமையாதபோது ஏற்படும் இழப்புகளை எப்பொறிமுறை ஈடுசெய்கின்றது? இவை அவநம்பிக்கையின் அறிகுறிகள் அல்ல மாறாக, முன்மதியுடன் செயற்படும் முன்னெச்சரிக்கையின் வெளிப்பாடுகளாகும்.

கவர்ச்சிகரமான கதையாடலின் வடிவில் முன்வைக்கப்படும்போதுதான் பேராசையைத் தூண்டும் ஊக வணிக முதலீடுகள், மிகவும் நம்பத்தகுந்ததாகத் தோன்றும் என்பதை வரலாறு எடுத்துக்காட்டுகின்றது. 17ஆம் நூற்றாண்டின் டச்சு குடியரசில், துலிப் மலர்கள் அரிதானவையாகவும் நவநாகரிகத்தின் அடையாளமாகவும் கருதப்பட்டன. நவீன சூழ்நிலைகளில், குறிப்பிட்ட காரணிகளின் தாக்கத்தால் சில வேளாண் பொருட்களுக்கு மிகுந்த தேவை ஏற்படலாம். ஆயினும், கேள்வி மாத்திரம் இடர்நேர்வினை நீக்குவதில்லை. உற்பத்தித் திறன், விலையிடல், செலவுக் கட்டமைப்பு மற்றும் காலம் என்பன நிதியியல் விளைவுகளை நிர்ணயிக்கும் முக்கியக் காரணிகளாகும். எதிர்பார்ப்புகள் இவ்வடிப்படைகளிலிருந்து விலகும்போது, இறுதியில் சீராக்கம் இடம்பெறுகின்றது.

இக்கருத்துக்கள் குறித்து கவனம் செலுத்துவதன் நோக்கம், உண்மையான வேளாண் தொழில்முயற்சியை ஊக்கமிழக்கச் செய்வதல்ல. இலங்கையின் எதிர்காலம் அதன் வேளாண் துறையின் வலிமை மற்றும் நவீனமயமாக்கல் என்பவற்றுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. முதலீடு, தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் சந்தை மேம்பாடு ஆகியவை இன்றியமையாதவையாகும். எனினும், உற்பத்தித்திறன்மிக்க முதலீடானது வெளிப்படைத்தன்மை, யதார்த்தமான ஊகங்கள் மற்றும் வாக்குறுதியளிக்கப்படும் வருமானத்திற்கும் அதற்கு துணையளிக்கும் அடிப்படை பொருளாதாரச் செயற்பாட்டிற்கும் இடையிலான ஒத்திசைவு ஆகியவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும். துலிப் மோகத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடம், பயிர்ச்செய்கை மதிப்பற்றது என்பதல்ல. மாறாக, ஊக வணிகம் உண்மையான அடிப்படை மதிப்புக்களையும் பொருளாதார யதார்த்தங்களையும் விட வேகமாக முன்னேறக்கூடும் என்பதே அப்பாடமாகும். உருவ அமைப்பு மாத்திரமே நீடித்த நிலைத்தன்மைக்கு உத்தரவாதம் அளிக்காது. நிலத்தில் இருக்கும் தாவரம் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிசார்ந்த வாக்குறுதியை தானாகவே உண்மையானதென்று நிரூபித்துவிடாது.

தத்துவஞானியும் பொருளாதார நிபுணருமான கார்ல் மார்க்ஸ் ஒருமுறை குறிப்பிட்டது போல, “வரலாறு தன்னைத்தானே மறுபடி நிகழ்த்துகிறது; முதலில் பேரிடராக, இரண்டாவதாக ஒரு வேடிக்கை நாடகமாக அதாவது கேலிக்கூத்தாக இடம்பெறுகின்றது” (மார்க்ஸ், 1935,ப. 15). நிதி விவகாரங்களில், பழைய நம்பிக்கை விதங்களை புதிய விபரிப்புக்கள் மீண்டும் உயிர்ப்பிக்கும் போது, இதே மாதிரியான நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் தோன்றுகின்றன. சொத்துகள் மாறினாலும், அவற்றை அணுகும் உளவியல் மாற்றமடைவதில்லை. முதலீட்டாளர்களுக்கு, ஆழ்ந்து ஆராய்வதில்தான் பாதுகாப்பு அடங்கியுள்ளது. முதலீடுகள் உங்களுக்கு உறுதியான பொன்னான இலாபத்தைத் தரும் என்று முன்வைக்கப்படும்போது, அதன் வெளித்தோற்றத்தை மாத்திரம் கண்டு ஏமாறாமல் இருப்பதும் அப்பயிர்கள் நடப்பட்டுள்ள மண்ணைப் போலவே, அதன் நிதியியல் அடித்தளங்களும் வலுவாகவும் உண்மையாகவும் இருக்கிறதா என்று ஆராய்வது புத்திசாலித்தனமாகும்■

## உசாத்துணைகள்

1. Goldgar, A. (2007). Tulipmania: Money, honor, and knowledge in the Dutch Golden Age. University of Chicago Press.
2. Marx, K. (1935). The eighteenth brumaire of Louis Bonaparte (p. 15). International Publishers.

This document was created with assistance from AI tools. The content has been reviewed and edited by Mr. S L Wanniarachchi.



# உலகளாவிய ஓய்வூதியச் சொத்துக்கள்: இலங்கையின் தற்போதைய நிலையும் முன்னோக்கிய பாதையும்

**செல்வி. திலினி உடுகம்கோரல**
மூத்த உதவிப் பணிப்பாளர்
முதலீட்டு முகாமைத்துவத் திணைக்களம்

மேற்கத்திய நாடுகளில் தர்ம அடிப்படையிலான ஏற்பாடுகளாக ஆரம்பிக்கப்பட்ட ஓய்வூதிய முறைமைகள் காலப்போக்கில் குறிப்பிடத்தக்களவில் பரிணாம வளர்ச்சியடைந்து, பரந்தளவிலான நவீன ஓய்வூதியத் திட்டங்களிற்கு ஆதரவளிக்கின்ற கட்டமைக்கப்பட்ட உரிமைகளாகவும் உரித்துக்களாகவும் மாற்றமடைந்துள்ளன. இம்முறைமைகள் வளர்ச்சியடைந்தமையினால் உலகளாவிய ஓய்வூதியச் சொத்துக்கள் சொத்து முகாமைத்துவத் தொழிற்றுறையில் அதிகரித்துச்செல்கின்ற பாரியளவிலான பங்கொன்றினைத் தம்வசப்படுத்திக்கொள்கின்றளவிற்கு விரிவடைந்துள்ளன. ஓய்வூதிய நிதியங்கள் நீண்ட முதலீட்டுக் காலங்களிலிருந்தும் ஒப்பீட்டளவில் எதிர்வுகூறக்கூடிய திரவத்தன்மைத் தேவைகளிலிருந்தும் உள்ளார்ந்தமாகப் பயனடைகின்றன. இருப்பினும், சொத்துக்களுடன் தொடர்புடைய பொறுப்புக்கள் எதிர்காலத்தில் நீண்ட காலத்திற்கு நீடிப்பதனால் சொத்துக்களை முகாமைசெய்வதில் அவை சிக்கலான சவாலையும் எதிர்கொள்கின்றன. முதுமையடைகின்ற குடித்தொகைகள், நீண்ட ஆயுட்கால எதிர்பார்க்கை மற்றும் மாற்றமடைகின்ற சமூக நெறிமுறைகள் மற்றும் கட்டமைப்புக்கள் போன்ற குடித்தொகைசார் சவால்கள் நிலைமையினை மேலும் மோசமடையச் செய்கின்ற அதேவேளை, ஓய்வூதிய முறைமைகள் மற்றும் சொத்துக்களின் நீடித்துநிலைத்திருக்குந்தன்மையானது ஊழியர்களின் தொழில்சார் வாழ்க்கைக்கும் உலகளாவிய ரீதியிலான மூலதனச் சந்தைகளிற்கும் இன்றியமையாததொன்றாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

இக்கட்டுரையானது உலகளாவிய ரீதியில் ஓய்வூதியச் சொத்துக்களின் பரிணாம வளர்ச்சியினை ஆராய்ந்து, உலகெங்கிலும் உள்ள ஓய்வூதியக் கட்டமைப்புக்களின் அளவு மற்றும் ஊடுருவல் ஆகியவற்றில் காணப்படுகின்ற குறிப்பிடத்தக்க சமத்துவமின்மைகளினை எடுத்துக்காட்டுகின்றது. நாடுகளிற்கு/பிராந்தியங்களிற்கு இடையிலான மாறுபடுகைகள் சமூக அபிவிருத்தி, கொள்கைகள், குடித்தொகைசார் கட்டமைப்புக்கள், இறைசார் இயலளவுகள் மற்றும் நிதியியல் சந்தைகளின் மேம்பட்டதன்மை ஆகியவற்றில் காணப்படுகின்ற வேறுபாடுகளைப் பிரதிபலிக்கின்றன. ஓய்வூதியச் சொத்துத் திரட்சியினை மூலதனச் சந்தையின் விரிவாக்கத்துடன் இணைப்பதன் மூலம் தம்மைத் தாமே நிலைநிறுத்திக் கொள்வதற்கு பொதுத் திறைசேரியினைச் சார்ந்திருக்கத் தேவையில்லாத ஓய்வூதிய முறைமைகளைப் பேணுவதில் நிதியியல் சந்தை அபிவிருத்தியின் முக்கியத்துவத்தினைக்

கட்டுரை எடுத்துக்காட்டுகின்றது. செயற்றிறன்மிக்க சொத்து ஒதுக்கீடு, பன்முகப்படுத்தல் மற்றும் நீண்டகால முதலீட்டு உபாயங்கள் ஆகியவற்றின் ஊடாக மூலதனச் சந்தைகள் பொதுமக்களின் சமூக நலனோம்புகையினைப் பெருமளவில் மேம்படுத்தும் விதத்தில் நிதியிடல் இடைவெளிகளினை நிவர்த்தி செய்வதற்கும் ஓய்வூதியப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கும் துணைபுரியக்கூடும். மூலதனச் சந்தைகளை வலுப்படுத்துவது என்பது வெறுமனே நிதியியல் துறை சார்ந்ததொரு குறிக்கோள் மாத்திரமின்றி, நீண்டகால சமூகப் பாதுகாப்பினை வலுப்படுத்துவதில் அவசியமானதொரு தூணொன்றாகும் என்பதையும் இது எடுத்துக்காட்டுகின்றது.

## 1. உலகளாவிய ஓய்வூதியத் தொழிற்றுறைச் சொத்துக்கள்


ஓய்வூதியத் தொழிற்றுறையானது முகாமைத்துவத்தின் கீழுள்ள சொத்துக்களில் அதிவேகமானதொரு வளர்ச்சியைப் பதிவுசெய்து, பல ஆண்டுகளாக உலகெங்கிலும் கணிசமானளவிலான செல்வத்தைத் திரட்டியுள்ளது. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் தொகுக்கப்பட்ட புள்ளவிபரங்களின் பிரகாரம், உலகளாவிய ஓய்வூதியச் சொத்துக்கள் கடந்த 23 ஆண்டுகளாக[1] 6.4 சதவீதம் கொண்ட வலுவான கூட்டு வருடாந்த வளர்ச்சி வீதமொன்றில் வளர்ச்சியடைந்து, 2024 இறுதியளவில் ஐ.அ.டொலர் 69.8 ரில்லியன் தொகையினை எட்டின. அதேவேளை, உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ஏறத்தாழ 5.3 சதவீதம் கொண்ட கூட்டு வருடாந்த வளர்ச்சி வீதமொன்றில் விரிவடைந்துள்ளது. இதன் விளைவாக, ஓய்வூதியச் சொத்துக்கள் பொருளாதார முக்கியத்துவத்தில் அதிகரித்து, 2001இல் உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 46 சதவீதத்திலிருந்து 2024ஆம் ஆண்டளவில் ஏறத்தாழ 59 சதவீதத்திற்கு உயர்வடைந்துள்ளன (வரைபடம் 1). அதற்கமைய, ஓய்வூதியச் சேமிப்பு நிதியங்கள் முழுமையான நியதிகளில் மாத்திரமின்றி, உலகளாவிய பொருளாதாரத்தின் அளவுடன் ஒப்பிடுகையிலும் விரிவடைந்துள்ளன. இதன் அளவினைத் தெளிவான கண்ணோட்டமொன்றில் நோக்குவதாயின், உலகளாவிய ஓய்வூதியச் சொத்துக்கள் 2024ஆம் ஆண்டளவில் உலகின் பாரியளவிலான 8 பொருளாதாரங்களின் ஒன்றிணைந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியினை விஞ்சிக் காணப்பட்டன.

ஓய்வூதியச் சேமிப்புக்களிற்கான தேவையினை அதிகரித்துச் செல்கின்ற முதுமையடைகின்ற குடித்தொகைகள், ஓய்வூதிய நிதியங்களின் புவியியல்சார் பன்முகப்படுத்தலினால் உந்தப்பட்டு, ஓய்வூதியச் சொத்துக்கள் மீதான நீண்டகால முதலீட்டு வருவாய்களின் அதிகரித்துச் செல்கின்ற திரட்சி போன்ற காரணிகளின் ஒருங்கிணைப்பினை இது பிரதிபலிக்கக்கூடும். இது நீண்டகால ஓட்டத்தில் தமது சொந்தப் பொருளாதாரங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியினை விஞ்சும் பொருட்டு ஏனைய உயர் வளர்ச்சிப் பொருளாதாரங்களில் உள்ள வாய்ப்புக்களை அவை அணுகுவதனை இயலச்செய்துள்ளது. மறுபுறம், அரசினால் தாபிக்கப்பட்ட கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் பல நாடுகளில் நிதியிடப்பட்ட ஓய்வூதிய முறைமைகளை விரிவுபடுத்தியுள்ளன. ஒப்பிடத்தக்க வளர்ச்சி வீதங்கள் பிராந்திய ரீதியில் மாறுபடக்கூடிய வேளையில், ஓய்வூதியச் சொத்துக்கள் பேரண்ட மட்டத்தில் ஒட்டுமொத்த மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியினை விஞ்சிக் காணப்பட்டுள்ளதென்ற முதன்மையான போக்கு தெளிவாகப் புலனாவதுடன், இது உலகளாவிய நிதியியல் முறைமையில் ஓய்வூதியச் சேமிப்பு நிதியங்களின் வளர்ச்சியடைந்து வருகின்ற பொருளாதார முக்கியத்துவத்திற்குத் துணைபுரிகின்றது.

செயற்கை நுண்ணறிவு மற்றும் அதன் விளைவாக ஏற்படுகின்ற துரித வாழ்க்கை முறைமை சார்ந்த மாற்றங்கள் என்பவற்றினால் மீள்வரையறைசெய்யப்படுகின்றதொரு யுகத்தில், பொருளாதாரக் கட்டமைப்புக்கள் மரபுசாரா வழிகளில் வளர்ச்சியடைவதனால் மரபு சார்ந்த ஓய்வூதியச் சேமிப்புக் கட்டமைப்புக்கள் அடுத்த ஒன்று அல்லது இரண்டு தசாப்தங்களினுள் "பொருத்தமற்றதாக" மாறக்கூடுமென எலோன் மாஸ்க் போன்ற முக்கியமானதொரு பிரமுகர் வாதிட்டுள்ளார். தொழில்நுட்ப ரீதியிலான இடையூறானது ஓய்வூதியச் சேமிப்புக்களிற்கான தேவையினை அடிப்படையிலேயே மாற்றிவிடுமா என்பதைத் தீர்மானிப்பது தொடர்ந்தும் முதிர்ச்சியற்றதொன்றாகக் காணப்படுகின்ற போதிலும் நீண்டகால சொத்துத் திரட்சியானது பொருளாதார உறுதிப்பாடு மற்றும் ஓய்வூதியப் பாதுகாப்பு ஆகியவற்றில் இன்றியமையாத வகிபாகமொன்றினைத் தொடர்ந்து ஆற்றுகின்றதென்பதைத் தற்போதைய சான்றுகள் குறித்துக்காட்டுகின்றன.

1. https://www.oecd.org/content/dam/oecd/en/publications/reports/2025/11/pension-markets-in-focus-2025_361974da/b095d0a0-en.pdf


**வரைபடம் 1: உலகளாவிய ஓய்வூதியச் சொத்துக்களின் வளர்ச்சி எதிர் மொத்த உள்நாட்டு உற்பத்தி (2001~2024)**




### 2. பிராந்தியங்களிற்கு இடையேயான ஓய்வூதியச் சொத்துக்கள் பரம்பலில் காணப்படுகின்ற கவலைக்கிடமான சமத்துவமின்மை

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் வெளியிடப்பட்ட 2025இல் ஓய்வூதியச் சந்தைகள் குறித்த உன்னிப்பான நோக்கு எனும் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, ஓய்வூதியச் சொத்துக்களின் குறிப்பிடத்தக்களவிலான சீரற்ற முறையிலான பகிர்ந்தளிப்பானது உலகெங்கிலும் அவதானிக்கப்படக்கூடும்[2]. இக்கற்கையின் நோக்கத்திற்காக, உலகக் குடித்தொகையின் ஏறத்தாழ 73 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 87 நியாயாதிக்கங்கள் மாத்திரமே ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மேலும், கண்டங்களிற்கு இடையிலான உள்ளடக்கப் பரப்பானது வேறுபடக்கூடும் என்பதுடன் இது மிகவும் துல்லியமான அவதானிப்புக்களை மேற்கொள்வதனைத் தடுக்கலாம். உள்ளடக்கப் பரப்பானது 2024ஆம் ஆண்டில் உலகெங்கிலும் உள்ள ஓய்வூதியச் சொத்துக்களின் பகிர்ந்தளிப்பினை எடுத்துக்காட்டும் விதத்தில் வரைபடம் 2இல் வரைபட வடிவில் வழங்கப்பட்டுள்ளது.

**வரைபடம் 2: உலகெங்கிலும் காணப்படுகின்ற ஓய்வூதியச் சொத்துப் பரம்பல்**





மூலம்: பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு

2. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (2025), 2025இல் ஓய்வூதியச் சந்தைகள் குறித்த உன்னிப்பான நோக்கு, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்புப் பதிப்பகம், பரிஸ், https://doi.org/10.1787/b095d0a0-en.

வட அமெரிக்காவானது ஐ.அ.டொலர் 48 ரில்லியன் தொகையினை விஞ்சுகின்ற ஓய்வூதியச் சொத்துக்களின் பாரியளவிலான பங்கைக் கொண்டுள்ளதுடன், இது உலகளாவிய (87 நியாயாதிக்கங்கள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன) ஓய்வூதியச் சொத்துக்களின் ஏறத்தாழ 73 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இருப்பினும், உலகக் குடித்தொகையின் ஏறத்தாழ 60 சதவீதத்திற்கு இருப்பிடமாக இருந்தபோதிலும், ஆசியாவானது ஓய்வூதியச் சொத்துக்களில் வெறுமனே 6.4 சதவீதப் பங்கினை அறிக்கையிட்டது. இருப்பினும், அனைத்துப் பிராந்தியங்களிற்குமிடையே “பொது ஓய்வூதிய ஒதுக்கு நிதியங்களின் கீழ் அதாவது, அரசாங்கத்தினால் முகாமைசெய்யப்படும் நிதியங்கள், ஆசியாவானது ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3.1 ரில்லியன் தொகையிலான சொத்துக்களைக் கொண்டுள்ளதாக அறிக்கை குறித்துக்காட்டுகின்றது. இருப்பினும், பொது ஓய்வூதிய ஒதுக்கு நிதியங்கள் தொடர்பான நாடளாவிய ரீதியிலான தரவுகள் கிடைக்கப்பெறாமையின் காரணமாக, இக்கட்டுரையின் நோக்கத்திற்காக “ஓய்வூதிய வழங்குநர்கள்” அதாவது, அநேகமாகத் தனியார் நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதன் விளைவொன்றாக, யப்பான், கொரியக் குடியரசு, மக்காவ் மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற பொது ஒதுக்கு நிதியங்களில் பெருமளவிலான சொத்துக்களைத் திரட்டியுள்ள குறித்த சில நாடுகளின் ஓய்வூதியச் சொத்துக்கள் மொத்த ஓய்வூதியத்தினால் பிணையளிக்கப்பட்ட சொத்துக்களைக் குறைத்து மதிப்பிடக்கூடும். மறுபுறம், வரையறுக்கப்பட்ட தரவுக் கிடைப்பனவிற்கு உட்பட்ட ஆபிரிக்காவானது உலகளாவிய ஓய்வூதியச் சொத்துக்களில் 0.1 சதவீதத்தினை அறிக்கையிட்டுள்ள வேளையில், ஓசியானியா, ஐரோப்பா மற்றும் இலத்தீன் அமெரிக்கா ஆகியன முறையே 3.8%, 14.8% மற்றும் 1.9% பங்குகளைப் பகிர்ந்து கொண்டன. இவ்வரைபட வடிவிலான எடுத்துரைப்பு மாத்திரம் ஓய்வூதியச் சொத்துப் பகிர்ந்தளிப்பில் காணப்படுகின்ற வெளிப்படையான சமத்துவமின்மையினை முழுமையாகப் பிரதிபலிக்காது. எனவே, இதனைத் தெளிவானதொரு கண்ணோட்டத்தில் நோக்கும் பொருட்டு, தலைக்குரிய அடிப்படையொன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள நியாயாதிக்கங்களின் குடித்தொகையுடன் ஓய்வூதியச் சொத்துக்கள் ஒப்பிடப்பட்டுள்ளன. இது வரைபடம் 3இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு வெளிப்படையான சமத்துவமின்மையினை வெளிப்படுத்துகின்றது.

**வரைபடம் 3: தலைக்குரிய ஓய்வூதியச் சொத்துக்கள்**




மூலங்கள்: பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு, உலக வங்கி

இவ்வரைபடத்தின்படி, பொது ஓய்வூதிய ஒதுக்கு நிதியங்களினைத் தவிர்த்தமையின் பகுதியளவிலான விளைவொன்றாக ஆசியாவானது மிகவும் கவலைக்கிடமானளவில் போதிய நிதியுதவியற்றுக் காணப்படுவதுடன், இது ஆபிரிக்காவிற்கு மாத்திரமே முன்னிலையில் நிற்கின்றது. ஆபிரிக்காவின் குடித்தொகையானது ஆசியாவிலும் பார்க்க கணிசமானளவு இளமையாகக் காணப்படுவதுடன் இது சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் உறுதிப்பாடு மற்றும் நிதியளிப்பு ஆகியவற்றில் நீண்டகால கரிசனைகளினை ஏற்படுத்துமா?


## 3. ஆசிய நாடுகள் எவ்வாறு செயலாற்றுகின்றன?

2025இல் ஓய்வூதியச் சந்தைகள் குறித்த உன்னிப்பான நோக்கு எனும் அறிக்கையானது 2024ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியச் சொத்துத் தரவுகளைக் கொண்ட 16 ஆசிய

நாடுகளின் தரவுகளைத் தொகுத்துள்ளதுடன் அவற்றில் இலங்கை உள்ளடக்கப்படவில்லை. இவ்வறிக்கையின்படி, இந்த 16 நாடுகள் கூட்டாக ஐ.அ.டொலர் 1,136.6 பில்லியன் பெறுமதியான சொத்துக்களைக் கொண்டிருந்ததுடன் யப்பான், கொரியக் குடியரசு மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இதில் முன்னிலை வகித்தன. இருப்பினும், யப்பானின் அரசாங்க ஓய்வூதிய முதலீட்டு நிதியத்தின் மொத்த முகாமைத்துவத்தின் கீழுள்ள சொத்துக்கள் மாத்திரம் 2024இல் ஐ.அ.டொலர் 1.6 ரில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் அறிக்கையானது "ஓய்வூதிய வழங்குநர்கள்" என்ற வகைப்பாட்டின் கீழ் இதனைத் தவிர்த்திருக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கதாகக் காணப்படுகின்றது.

ஒப்பீட்டு ரீதியிலான கண்ணோட்டத்தினை வலுப்படுத்துவதற்காக, கட்டுரையாளர் இலங்கையினையும் கலந்துரையாடலில் இணைத்துக்கொள்கின்றார். இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி, ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம், ஏனைய ஒப்புதலளிக்கப்பட்ட ஓய்வூதியங்கள் மற்றும் சேமலாப நிதியங்கள் மற்றும் பொதுச் சேவைச் சேமலாப நிதியம் என்பவற்றை ஓய்வூதியம்/ஓய்வுகால நிதியங்களிற்கான முக்கிய ஒப்பந்த ரீதியிலான சேமிப்பு நிறுவனங்கள் உள்ளடக்குவதுடன் இதன் மொத்தச் சொத்துக்கள் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 18.2 பில்லியனிற்கு நிகராக ரூ. 5,456 ரில்லியன் பெறுமதியாக விளங்குகின்றது.

**வரைபடம் 4: ஆசியாவில் ஓய்வூதியச் சொத்துக்களின் பரம்பல்**





மூலங்கள்: பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு, உலக வங்கி

வரைபடம் 4ஆனது முழுமையான சொத்து அளவுகள் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான ஒப்பீடு ஆகியவற்றின் நியதிகளின் அடிப்படையில் ஆசியா முழுவதிலும் உள்ள ஓய்வூதியச் சொத்துக்களின் பரம்பலைக் காட்டுகிறது. யப்பான், கொரியா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் பாரியளவிலான சொத்துத் தளங்களினைக் கொண்டுள்ள வேளையில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சிங்கப்பூர் (81%), இஸ்ரேல் (70%), மலேசியா (67%) மற்றும் ஹொங்கொங் (53%) ஆகியவற்றின் ஓய்வூதியச் சொத்துக்களின் பங்கானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பாதியளவினை விஞ்சிக் காணப்பட்டதுடன் இது பொருளாதாரத்தின் அளவிற்கு ஓய்வூதியச் சொத்துக்களின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துகின்றது. உலகின் இரண்டாவது பாரியளவிலான பொருளாதாரமாக விளங்குகின்ற சீனாவானது அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஓய்வூதியச் சொத்துக்களின் பங்கினைக் குறிப்பிடத்தக்களவு குறைவாகக் கொண்டுள்ளது. இது அமெரிக்காவுடன் ஒப்பிடுகையில் முற்றிலும் மாற்றமாகக் காணப்படுவதுடன் அமெரிக்காவின் ஓய்வூதியச் சொத்துக்கள் அதன் பொருளாதார மட்டத்திலும் பார்க்க 1.56 மடங்கினால் விஞ்சிக் காணப்படுகின்றன. மறுபுறம், இலங்கை அதன் பொருளாதாரத்தில் 18 சதவீதத்தினை விஞ்சியளவிலான ஓய்வூதியச் சொத்துக்களின் ஒப்பீட்டளவில் கணிசமானளவிலான திரட்சியினைக் கொண்டுள்ளது. இது

பல தசாப்த முதலீட்டுக் காலப்பகுதிகளுடன் இன்னமும் பயன்படுத்தப்படாத நீண்டகாலச் சேமிப்புக்களின் முக்கிய அளவீடொன்றாகக் காணப்படுவதுடன் இது உபாய ரீதியாகப் பயன்படுத்தப்படுமேயானால் நீண்டகால வருவாய்களையும் பரந்தளவிலான பொருளாதார வளர்ச்சியினையும் தூண்ட முடியும்.

**வரைபடம் 5: ஆசியாவில் தலைக்குரிய ஓய்வூதியச் சொத்துக்கள் எதிர் 65 வயதிற்கு மேற்பட்ட குடித்தொகை**



மூலங்கள்: பொருளாதார ஒத்துழைப்பு மற்றுய மேம்பாட்டு அமைப்பு, உலக வங்கி

மறுபுறம், வரைபடம் 5ஆனது தொடர்புடைய நாடுகளின் முதியோர் குடித்தொகைக்கு எதிராக தலைக்குரிய ஓய்வூதியச் சொத்துக்களை எடுத்துக்காட்டுகின்றது. அறிக்கையிடப்பட்ட ஆசிய நியாயாதிக்கங்களிடையே சிங்கப்பூர், இஸ்ரேல் மற்றும் ஹொங்கொங் ஆகியன தலைக்குரிய உயர்ந்தளவிலான ஓய்வூதியச் சொத்துக்களைக் கொண்ட நாடுகளாகக் காணப்படுகின்றன. தலைக்குரிய ஓய்வூதியச் சொத்துக்கள் ஒரு நாட்டில் சராசரித் தனிநபரொருவருக்குக் கிடைப்பனவாகவுள்ள ஓய்வூதியப் பாதுகாப்பின் பரந்தளவிலான குறித்துக்காட்டலொன்றினை வழங்குகின்ற வேளையில், குடித்தொகைக் கட்டமைப்புக்களின் ஆழமானதொரு பரீட்சிப்பானது ஓய்வூதிய அணுகல் மற்றும் சொத்துப் போதுமாந்தன்மை பற்றிய மிகவும் அர்த்தமுள்ள நுண்ணோக்கினை வழங்குகின்றது.

உதாரணமாக, யப்பானானது 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினையுடைய மக்களின் உலகிலேயே இரண்டாவது மிகவும் உயர்ந்தளவிலான விகிதத்தினைக் கொண்டு, அதன் மொத்தக் குடித்தொகையில் 29.8 சதவீதத்திற்கு வகைகூறுகின்றது. குடித்தொகையில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியினர் தங்கியிருப்பவர்களாகக் காணப்படுகின்ற போது, ஓய்வூதியப் பங்களிப்புக்களில் ஏற்படுகின்ற இயல்பான வளர்ச்சியானது உட்கிடையாகக் கட்டுப்படுத்தப்படுவதாயமைகின்றது. கடந்துசெல்கின்ற ஒவ்வோர் ஆண்டும் தொழிற்படையில் நுழைவோரிலும் பார்க்க அதிகளவிலான தனிநபர்கள் ஓய்வுபெற்றுச் செல்வதனால், பங்களிப்பாளர் தளமானது இயற்கையாகவே சுருங்கத் தொடங்குகின்றது. இப்பின்னணியில், யப்பான் அதன் தொழில்புரிகின்ற குடித்தொகைக்கு விகிதாசாரமற்ற விதத்தில் சுமையினை ஏற்படுத்தாமல், தொடர்ச்சியாக விரிவடைந்து செல்கின்ற ஓய்வூதியப் பொறுப்பொன்றிற்கு மத்தியில், ஓய்வூதியங்களுக்குப் போதியளவில் நிதியிடுவதில் கடுமையான சவாலொன்றினை எதிர்கொள்கின்றது.

மறுபுறம், இலங்கை முதுமையடைகின்ற குடித்தொகையின் அழுத்தங்களை எதிர்கொண்டு வருகின்றது. இவ்வளவானது யப்பானுடன் இன்னமும் ஒப்பிடக்கூடியதாக இல்லாவிட்டாலும், இலங்கை அதன் பிராந்திய ரீதியிலான அயல் நாடுகளிற்கு மத்தியில் துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்ற முதியோர் குடித்தொகை தொடர்பில் தனித்துவமாக விளங்கி, குறிப்பாக அதன் தங்கியிருக்குந்தன்மை சார்ந்த நிலைமையானது முன்கூட்டியே அதாவது 55-60 வயதிலேயே ஆரம்பிக்கின்றது

என்பதனைக் கருத்திற்கொண்டு அதன் ஓய்வூதிய முறைமைக்கான தோற்றம்பெற்று வருகின்ற நீண்டகால நீடித்துநிலைத்திருக்குந்தன்மை குறித்த கரிசனைகளினைச் சமிக்ஞை செய்கின்றது.

## 4. ஓய்வூதியப் பொறுப்புடமைகளினை முகாமைசெய்வதில் மூலதனச் சந்தைகளின் வகிபாகம்

ஏதேனும் ஓய்வூதிய முறைமையின் அடிப்படைச் சவால்களில் ஒன்று அதன் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வருகின்ற பொறுப்புடமையாகக் காணப்படுகின்றது. இதற்கு முரணாக, நாடொன்றின் சமூக நலனோம்புகை மேம்படுகின்றமையினால் இப்பொறுப்புடமை விரிவடைகின்றது. சுகாதாரத் துறையின் முன்னேற்றங்கள், சிறந்த வாழ்க்கைத் தரநியமங்கள் மற்றும் ஒட்டுமொத்தப் பொருளாதார அபிவிருத்தி ஆகியன ஆயுட்கால எதிர்பார்ப்பினை அதிகரிக்கின்றன. இவை சந்தேகத்திற்கு இடமின்றிய நேர்க்கணிய பெறுபேறுகளாகக் காணப்படுகின்ற வேளையில், தனிநபர்கள் ஓய்வுகாலத்தில் அதிக ஆண்டுகளைக் கழிக்கின்றார்கள் என்பதையும் இவை குறிக்கின்றன. இதன் விளைவொன்றாக, ஓய்வூதிய முறைமைகள் நீண்ட காலத்திற்குக் கொடுப்பனவுகளினை மேற்கொள்வதற்குத் தேவைப்படுத்தப்படுவதானது அவற்றின் நீண்டகாலக் கடப்பாடுகளினைக் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கின்றது.

ஓய்வூதிய நிதியளிப்பின் தலைமுறைகளிற்கிடையிலான தன்மையானது மற்றுமொரு கட்டமைப்பு சார்ந்த கரிசனையாகக் காணப்படுகின்றது. பல முறைமைகளில், தற்போதைய ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தற்போதைய தொழில்புரிகின்ற குடித்தொகையினால் பாரியளவிற்கு நிதியிடப்படுகின்றன. இது குறிப்பாக, பொருளாதாரங்கள் மெதுவான வளர்ச்சி அல்லது முதிர்வடைகின்ற குடித்தொகையினைக் கொண்டுள்ள சந்தர்ப்பங்களில் தற்போதைய தொழிற்படையின் மீது விகிதாசாரமற்ற சுமையொன்றினை உருவாக்கின்றது. தொழிற்படைப் பங்கேற்பு வீதம் மாறுகின்றமையினாலும் தங்கியிருக்குந்தன்மை சார்ந்த விகிதம் அதிகரிக்கின்றமையினாலும் எதிர்கால ஓய்வூதியப் பொறுப்புடமைகளிற்கு நீடித்துநிலைத்திருக்கின்ற முறையில் நிதியிடலானது அதிகரித்தளவில் சவாலாக மாற்றமடைகின்றது. பல்வேறு நாடுகளில், அரசாங்கங்கள் இறைசார் மூலவளங்களில் வரையறுக்கப்பட்ட பங்கொன்றினை மட்டுமே ஓய்வூதியக் கடப்பாடுகளுக்கு ஒதுக்க முடியும் என்பதனால் இது அழுத்தமளிக்கின்ற இறைசார் மற்றும் சமூகப் பிரச்சனையொன்றாக உருவெடுத்துள்ளது.

இதுவே மூலதனச் சந்தைகள் இன்றியமையாத முக்கியத்துவத்தினைப் பெறுகின்ற தருணமாகும். தொழில்தருநர்கள், ஊழியர்கள் அல்லது அரசிடமிருந்து பெறப்படுகின்ற இயல்பான பங்களிப்புக்கள் மாத்திரம் வளர்ச்சியடைந்து வருகின்ற நீண்டகாலப் பொறுப்புடமைகளினை நிவர்த்தி செய்வதற்குப் பெரும்பாலும் போதியளவிலானதாகக் காணப்படுவதில்லை. ஓய்வூதியச் சொத்துக்களை நீண்டகால நோக்கொன்றுடன் உபாய ரீதியில் முதலீடு செய்வதன் மூலம், பங்களிப்புக்களிற்கும் கடப்பாடுகளிற்கும் இடையிலான இடைவெளியினை அதாவது நிதிப் பற்றாக்குறையினைத் தளர்த்துவதற்குத் துணைபுரிகின்ற வருவாய்களை நிதியங்கள் உருவாக்க முடியும். முன்மதியுடனும் தொலைநோக்குப் பார்வையுடனும் முகாமைசெய்யப்படுகின்ற போது, நீண்டகால முதலீட்டு உபாயங்கள் பொது நிதிகள் மீதான அழுத்தத்தினைத் தளர்த்துவதற்கும் எதிர்காலத் தலைமுறையினர் மீது சுமத்தப்படும் சுமையினையும் குறைக்க முடியும். ஓய்வூதிய நிதியங்கள், அவற்றின் இயல்பிற்கமைய விரிவாக்கப்பட்ட முதலீட்டுக் கால எல்லைகளிலிருந்து பயனடைவதுடன் இது சொத்து வகுப்புக்களிற்கிடையே நீண்டகால வளர்ச்சி வாய்ப்புக்களிலிருந்து பயனடைவதற்கும் அதன்மூலம், மூலதனச் சந்தைகளில் முனைப்புடனான வகிபாகமொன்றினை ஆற்றுவதற்கும் அவற்றினை நன்கு நிலைநிறுத்துகின்றது.

இலங்கையின் பின்னணியில், ஓய்வூதிய நன்மைகளின் கட்டமைப்பானது பொது மற்றும் தனியார் துறைகளிற்கிடையே தெளிவானதொரு வேறுபாட்டினைப் பிரதிபலிக்கின்றது. அரசாங்க ஊழியர்கள் வரையறுக்கப்பட்ட நன்மைசார் திட்டங்களினால் பெரும்பாலும் உள்ளடக்கப்படுவதுடன் இங்கு முதலீடு மற்றும் நீண்ட ஆயுட்கால இடர்நேர்வுகளினை அரசு பொறுப்பேற்கின்றது. மாறாக, தனியார் துறை ஊழியர்கள் சேமலாப நிதியத்தின் வடிவிலான வரையறுக்கப்பட்ட பங்களிப்பு ஏற்பாடுகளில் பங்கேற்பதற்குச் சட்டபூர்வமாக ஆணையளிக்கப்பட்டுள்ளனர். இதில், இறுதியான ஓய்வூதிய நன்மையானது திரட்டப்பட்ட பங்களிப்புக்கள் மற்றும் முதலீட்டு வருவாய்களிலேயே தங்கியுள்ளது. இதனால், நீண்ட ஆயுட்காலத்துடன் தொடர்புடைய இடர்நேர்வானது அதாவது,

ஓய்வூதியதாரரொருவர் எவ்வளவு காலம் வாழ்கின்றார் மற்றும் ஓய்வூதியச் சேமிப்புக்களின் போதுமாந்தன்மை, அரசின் மீது சுமத்தப்படாமல் தனிநபர்களுக்கே மாற்றப்படுகின்றது.

இக்கட்டமைப்பானது அரசாங்கத்திற்கான நேரடி இறைச் சுமையினைக் கட்டுப்படுத்துகின்ற அதேவேளை, மற்றுமோர் இடர்நேர்வுசார் பரிமாணத்தினை அறிமுகப்படுத்துகின்றது. ஓய்வூதியச் சேமிப்புக்கள் பரந்தளவில் போதுமாந்தன்மையினைக் கொண்டிருக்காத பட்சத்தில், அதன் விளைவுகள் முதியோர் குடித்தொகையின் வாழ்க்கைத்தரச் சீர்குலைவிற்கு வழிவகுத்து, அரச தலையீட்டினைக் கட்டாயப்படுத்தி, கட்டமைப்பு ரீதியான நெருக்கடியாக மாறுவதற்கு வழிவகுக்கக்கூடும். இலங்கை சிரேஷ்ட பிரசைகளுக்காக உயர்ந்தளவிலான வட்டி வீதச் சேமிப்புத் திட்டங்களை நிறுவுவதற்கு முற்பட்டுள்ளதுடன், இது வரி செலுத்துவோரின் செலவிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இத்தகைய பொறிமுறைகளின் செலவானது அத்தகைய செலவினத்தின் உண்மையான பொருளாதார உள்ளடக்கத்தைப் பொறுத்தவரையில் அரசினால் நிதியிடப்படுகின்ற ஓய்வூதிய நன்மைகளாகவே வகைப்படுத்தப்பட வேண்டும். எனவே, ஓய்வூதிய நிதியச் சொத்துக்கள் நீடித்துநிலைத்திருக்கின்ற மற்றும் போட்டித்தன்மைமிக்க வருவாய்களினை உருவாக்குவதனை நிச்சயப்படுத்துவதானது வெறுமனே நிதியியல் சார்ந்ததொரு குறிக்கோள் மாத்திரமின்றி, சமூகக் கடப்பாடொன்றாகவும் காணப்படுகின்றது. வலுவான, ஆழமான மற்றும் நன்கு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மூலதனச் சந்தைகள் இவ்விடயத்தில் முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுகின்றன. நீண்டகால மூலதனத்தினை வினைத்திறன்மிக்க விதத்தில் ஒதுக்கீடு செய்வதனை வசதிப்படுத்துவதன் மூலமும் முதலீட்டுச் செயலாற்றத்தினை மேம்படுத்துவதன் மூலமும் அவை ஓய்வூதியப் பாதுகாப்பினைப் பேணுவதற்கு உதவுவதுடன், அதற்கமைய ஒரு தேசத்தின் பரந்தளவிலான பொருளாதார மற்றும் சமூக உறுதிப்பாட்டிற்குப் பங்களிக்கின்றன.

சுருக்கமாகக் கூறினால், ஓய்வூதிய முறைமைகளின் நீடித்துநிலைத்திருக்குந்தன்மை என்பது குடித்தொகைசார் யதார்த்தங்கள், இறை ஒழுக்கவியல் மற்றும் மூலதனச் சந்தைகளில் செயற்றிறன்மிக்க பங்கேற்பு ஆகியவற்றிற்கு இடையிலான கவனமான சமநிலையொன்றில் அதிகரித்தளவில் தங்கியிருக்கின்றது. சிந்தனைமிக்க நீண்டகால முதலீட்டு முகாமைத்துவம் காணப்படாவிடில், அரசாங்கங்கள் மற்றும் தனிநபர்கள் ஆகிய இரு தரப்பினர் மீதும் அதிகரித்துச் செல்கின்ற ஓய்வூதியப் பொறுப்புடமைகளின் எதிர்காலச் சுமை மாத்திரமே மேலும் தீவிரமடையும்.

மேலே எடுத்துக்காட்டப்பட்டவாறு, ஓய்வூதிய நீடித்துநிலைத்திருக்குந்தன்மைக்கு ஆதரவளிப்பதில் மூலதனச் சந்தைகளின் செயற்றிறனானது ஒரு நாட்டின் நிதியியல் சந்தை அபிவிருத்தியின் மட்டத்திலேயே பாரியளவில் தங்கியுள்ளது. ஓய்வூதிய நிதியங்கள் அவற்றிற்குத் தேவையான இடர்நேர்வு சீராக்கப்பட்ட வருவாய்களை அடைந்துகொள்வதற்கான அவற்றின் இயலளவினைத் தீர்மானிப்பதில் ஆழம், திரவத்தன்மை, சாதனங்களின் பரந்தளவிலானதன்மை மற்றும் பல்வேறு துறைகளில் நீண்டகால முதலீட்டு வாய்ப்புக்களின் கிடைப்பனவு ஆகியன இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றன.


ஓய்வூதியச் சொத்துக்கள் நீடித்துநிலைத்திருக்கின்ற நீண்டகால பெறுபேறுகளினை அடைவதற்கு மூலதனச் சந்தைகள் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் கட்டமைப்பினை அர்த்தமுள்ள விதத்தில் பிரதிபலிக்கின்ற பன்முகப்படுத்தப்பட்ட துறைகளிற்கான வெளிப்படுத்துகையினை வழங்க வேண்டும். நன்கு வளர்ச்சியடைந்ததொரு மூலதனச் சந்தையானது நிதியியல் பணிகள், தயாரிப்பு, உட்கட்டமைப்பு, தொழில்நுட்பம், நுகர்வோர் துறைகள், வலு போன்ற பல தொழிற்றுறைகளில் உள்ள கம்பனிகளை உள்ளடக்கி, ஓய்வூதிய நிதியங்கள் மூலதனத்தினை மிகவும் வினைத்திறன்மிக்க விதத்தில் ஒதுக்கீடு செய்யப்படுவதனை அனுமதிக்கின்ற வேளையில், பன்முகத்தன்மையினைப் பேணுகின்றன. முதலீட்டுக் காலங்கள் பல தசாப்தங்களிற்கு நீடிப்பதனால் துறைசார் பன்முகத்தன்மையானது செறிவடைதல் சார்ந்த இடர்நேர்வினைக் குறைப்பதுடன் பொருளாதாரச் சுழற்சிகளிற்கிடையே தாக்குப்பிடிக்குந்தன்மையினை மேம்படுத்துவதனால் நீண்டகால நிறுவனம் சார்ந்த முதலீட்டாளர்களுக்கு இது குறிப்பிடத்தக்களவு முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

சந்தைத் திரவத்தன்மை மற்றும் ஆழம் என்பன சம அளவில் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. ஆழமான இரண்டாந்தரச் சந்தைகள் வினைத்திறன்மிக்க விலைக் கண்டறிதலினை வசதிப்படுத்துவதுடன் கொடுக்கல்வாங்கல் சார்ந்த செலவுகளைக் குறைத்து, பாரியளவிலான தள்ளுபடிகள் அல்லது கட்டுப்பணங்களினை உள்ளீர்க்காமல் அதன்மூலம், சந்தை விலைகளில் கணிசமானளவு தாக்கத்தினை ஏற்படுத்தாமல்,

பாரியளவிலான மூலதனத்தினை நிறுவன முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதனையும் மீள்சமநிலைப்படுத்துவதனையும் இயலச்செய்கின்றன. மறுபுறம், மூலதனப் பங்குரிமை மற்றும் படுகடன் சந்தைகள் மூலம் வெளிநாட்டு நிதியளிப்பினைத் திரட்டுவதற்கு விரும்புகின்ற துடிப்பான கூட்டாண்மைத் துறையொன்று முதலீட்டு வாய்ப்புக்களை மேலும் வலுப்படுத்துகின்றது. ஆயினும், வரையறுக்கப்பட்ட பட்டியலிடல்கள், பொதுமக்கள் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்குக் கிடைப்பனவாகவுள்ள கம்பனிகளின் மொத்தப் பங்குகளின் குறைந்தளவிலான சதவீதம் மற்றும் பலவீனமான வர்த்தக நடவடிக்கைகளினைக் கொண்ட பின்தங்கிய நிலையிலுள்ள சந்தைகள் சொத்துப்பட்டியல் உருவாக்கம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் ஆகியவற்றினை முடக்கின்றன.

அபிவிருத்தியடைந்த சந்தைகளில், மொத்தச் சந்தை மூலதனவாக்கமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியினைப் பெரும்பாலும் விஞ்சிக் காணப்படுகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான உயர்ந்தளவிலானதொரு சந்தை மூலதனவாக்க விகிதமானது நிதியியல் ஆழத்திற்கான அண்ணளவானதொரு குறியீடாக அநேகமாகக் குறிப்பிடப்படுவதுடன் இது பொருளாதார இடையீட்டில் கணிசமானளவிலானதொரு வகிபாகத்தினை மூலதனச் சந்தைகள் ஆற்றுகின்றன என்பதனைக் குறித்துக்காட்டுகின்றது. இத்தகைய சந்தைகள் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு உள்நாட்டு நிறுவனங்களினை அணுகுவதற்கு மட்டுமின்றி, வெளிநாட்டுக் கம்பனிகள் மற்றும் எல்லைகளிற்கிடையிலான முதலீட்டு வழிமுறைகளை அணுகுவதற்கும் வழிவகுத்து அதன்மூலம், உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கான பன்முக ரீதியிலான வாய்ப்புக்களைக் குறிப்பிடத்தக்களவு மேம்படுத்துகின்றன. நீண்ட முதலீட்டுக் காலங்களினைக் கொண்ட ஓய்வூதிய நிதியங்களிற்கு இப்பரந்தளவிலானதன்மையானது அவற்றின் பொறுப்புடமைசார் விவரங்களுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்த சொத்துப்பட்டியல்களினை உருவாக்குவதற்கான திறமையினைக் குறிப்பிடத்தக்களவு மேம்படுத்துகின்றது.

**வரைபடம் 6: ஆசியாவில் சந்தை மூலதனவாக்கலிற்கான ஓய்வூதியச் சொத்துக்கள்**




வரைபடம் 6ஆனது மொத்தச் சந்தை மூலதனவாக்கலிற்கான ஓய்வூதியச் சொத்துக்களின் விகிதத்தினை எடுத்துக்காட்டுகின்றது. இலங்கையானது மொத்தச் சந்தை மூலதனவாக்கலில் ஏறத்தாழ 96 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற ஓய்வூதியச் சொத்துக்களுடன் தனித்துவமாகக் காணப்படுகிறது. அதன் பங்குரிமை மூலதனச் சந்தையின் அளவுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்களவு உயர்ந்தளவிலான செறிவடைதலொன்றாகக் காணப்படுகின்றது. அதேவேளையில், இலங்கையின் ஓய்வூதியச் சொத்துக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெறுமனே 18 சதவீதத்தினைப்

பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. பொருளாதாரத்துடன் ஒப்பிடுகையில் விஞ்சியளவில் பாரியளவிலானதோர் ஓய்வூதிய முறைமை என்பது சிக்கலிற்குரிய விடயமாகக் காணப்படாவிட்டாலும் ஒப்பீட்டளவில் சிறிய மற்றும் பின்தங்கிய நிலையிலுள்ள மூலதனச் சந்தை என்பதே இதற்குக் காரணமாயமைகின்றது என்பதனை இது எடுத்துக்காட்டுகின்றது. ஆதலால், சந்தை மூலதனவாக்கத்திற்கான உயர்ந்தளவிலான ஓய்வூதியச் சொத்துக்களின் விகிதமானது நாட்டில் ஓய்வூதியத் திரட்சியின் ஒப்பீட்டு ரீதியிலான அளவிற்கு மாறாக சந்தையின் அளவு மற்றும் பரந்தளவிலானதன்மை என்பவற்றில் உள்ள கட்டமைப்புசார் வரையறைகளினைப் பிரதிபலிக்கின்றது. உண்மையில், இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான ஓய்வூதியச் சொத்துக்களின் பங்கின் அளவுடன் ஒப்பிடுகையில் அதன் மூலதனச் சந்தையானது விகிதாசாரமற்ற விதத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது என்பதனை இவ்வரைபடம் மேலும் தெளிவுபடுத்துகின்றது.

முன்னைய ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான சந்தை மூலதனவாக்க விகிதமானது முன்னேற்றமடைந்திருந்த போதிலும், இவ்வதிகரிப்பின் பெருமளவிலான பகுதியானது சந்தையின் பரந்தளவிலானதன்மையில் ஏற்பட்ட அர்த்தமுள்ள விரிவாக்கத்திலும் பார்க்க ஏற்கனவே பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனங்களின் விலைப் பெறுமதியுயர்வினாலேயே உந்தப்பட்டுள்ளது. புதிய கூட்டாண்மைப் பட்டியலிடல்கள், துறைசார் பன்முகத்தன்மை அல்லது முதலீடு செய்யக்கூடிய சாதனங்களின் விரிவாக்கம் ஆகியவற்றில் மிகவும் வரையறுக்கப்பட்டளவிலான வளர்ச்சியே ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக, ஓய்வூதிய நிதியங்கள் வரையறுக்கப்பட்ட முதலீட்டு வீச்சொன்றினுள் தொழிற்பட்டு, செறிவடைதல்சார் இடர்நேர்வினை அதிகரித்து, சொத்துப்பட்டியல் மேம்படுத்துகையினை மட்டுப்படுத்துகின்றன.

இருப்பினும், அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்கள் ஓய்வூதியச் சொத்துக்களுக்கும் சந்தை மூலதனவாக்கலிற்கும் இடையிலான மிகவும் சமநிலைமிக்க உறவொன்றினைக் காட்டுகின்றன. உதாரணமாக, ஓய்வூதியச் சொத்துக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 80.5 சதவீதத்திற்கு நிகராகக் காணப்படுவதாக சிங்கப்பூரானது அறிக்கையிடுகின்ற வேளையில், சந்தை மூலதனவாக்கலில் ஏறத்தாழ 69 சதவீத்தினை ஓய்வூதியச் சொத்துக்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. யப்பானானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 28.2 சதவீத ஓய்வூதியச் சொத்துக்களினைக் கொண்டுள்ளதுடன் சந்தை மூலதனவாக்கலில் ஏறத்தாழ 18 சதவீத ஓய்வூதியச் சொத்துக்களிற்கு வகைகூறுகின்றது. இந்நாடுகளின் விடயத்தில், விஞ்சியளவிலான செறிவடைதலினைத் தேவைப்படுத்தாமல் கணிசமானளவிலான நீண்டகால நிறுவனம்சார் மூலதனத்தினை உள்ளீர்ப்பதற்கு மூலதனச் சந்தைகள் போதுமானளவு ஆழமாகவும் பன்முகத்தன்மையுடனும் காணப்படுகின்றன. இருப்பினும், இந்நாடுகள் முதலீட்டு வருவாய்களினை உகந்ததாக்குவதற்கு உலகெங்கிலும் பூகோள ரீதியில் தமது முதலீடுகளைப் பெருமளவில் பன்முகப்படுத்தியுள்ளன. மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் உயர்ந்தளவிலான சந்தை மூலதனவாக்கம், பரந்தளவிலான துறைசார் பிரதிநிதித்துவம் மற்றும் அபிவிருத்தியடைந்த நிலையான வருவாய்ச் சந்தைகள் ஆகியன ஓய்வூதிய நிதியங்களிற்கு அத்தியாவசியமான முன்தேவைப்பாடுகளாகக் காணப்பட்டு, உள்நாட்டிலும் பன்னாட்டிலும் பன்முகப்படுத்தப்பட்ட வாய்ப்புக்களை வழங்குகின்றன.

இப்பின்னணியில், மூலதனச் சந்தை விரிவாக்கமானது ஓய்வூதிய நீடித்துநிலைத்திருக்குந்தன்மைக்கு அத்தியாவசியமானதாகக் காணப்படுவதனால் இலங்கையின் நிலைமையானது கட்டமைப்பு ரீதியிலானதோர் அவசியத்தினை எடுத்துக்காட்டுகின்றது. ஒப்பீட்டளவில் குறுகியளவிலான சந்தையொன்றினுள் ஓய்வூதியச் சொத்துக்களின் செறிவடைதலானது முறைமைசார் வெளிப்படுத்துகையினை அதிகரிப்பதுடன் பன்முகப்படுத்தப்பட்ட நீண்டகால வருவாய்களினை உருவாக்குவதற்கான திறனைக் குறைக்கின்றது.

எனவே, நாடொன்றென்ற ரீதியில் இலங்கை தேவைப்படுத்துகின்ற கொள்கை ரீதியான தாக்கங்களில் பின்வருவன உள்ளடங்கலாமெனினும், இவற்றிற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாயமைவதில்லை:

- பாரியளவிலான தனியார் கூட்டாண்மைகள் பொதுவாக பட்டியலிடப்படுவதனை ஊக்குவித்து அதன்மூலம், பங்குரிமை மூலதன வீச்சினை விரிவுபடுத்தல்.
- வர்த்தக ரீதியாக ஆற்றல்வாய்ந்த அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினைப் பகுதியளவிலான பட்டியலிடல்கள் அல்லது படுகடன் மற்றும் பங்குரிமை மூலதன நிதியிடலிற்காக பொது-தனியார் கட்டமைப்புக்கள் ஊடாக மூலதனச் சந்தைக்குப் படிப்படியாகக் கொண்டுவருதல்.

- தனியார் நிதியிடலிலும் பார்க்க உள்நாட்டு மற்றும் பொது மூலதன மூலங்களினை ஊக்குவித்தல் மற்றும் வங்கித்தொழில் துறையின் மீதான தங்கியிருக்குந்தன்மையினை ஊக்கமிழக்கச்செய்தல்.
- வலுவான மற்றும் வரையறுக்கப்பட்ட விளைவு வளையியொன்றின் வளர்ச்சியினை வசதிப்படுத்துவதற்கு அடிப்படை முதிர்வுகளிற்கிடையே முறிகளின் வழங்கலினை ஊக்குவித்தல்.
- நீண்டகாலப் பொறுப்புக்களிற்குக் கால அளவின் அடிப்படையில் பொருந்தக்கூடிய சாதனங்களை வழங்குவதற்குக் கூட்டாண்மை முறிச் சந்தையினை மேம்படுத்தல் மற்றும் இரண்டாந்தரச் சந்தையில் நிறுவனம் சார்ந்த பங்களிப்பினைச் செயற்படுத்தல்.

நாட்டில் பாரியளவிலான கூட்டாண்மைகள் தொடர்ந்தும் தனியாகத் தொழிற்பட்டு வருகின்ற வேளையில், அரச துறையின் பெரும்பகுதி கணிசமானளவிலான பொருளாதார ரீதியில் பெறுமதி கூட்டப்பட்டதொரு பங்களிப்பினை வழங்குகின்ற போதிலும், மூலதனச் சந்தைக் கட்டமைப்பிற்கு வெளியிலேயே தொடர்ந்தும் காணப்படுகின்றது. இது பட்டியலிடப்பட்ட கம்பனியொன்றாக மாறுவதற்கான பொருளாதார ரீதியான நியாயபூர்வதன்மையினை அதாவது, ஒப்பீட்டளவில் மலிவான செலவில் பரந்தளவிலான முதலீட்டாளர் தளமொன்றினை அணுகுதல், குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாக அமைகின்ற வேளையில், நிதியியல் சந்தையில் காணப்படுகின்ற கட்டமைப்புசார் சமநிலையின்மைகளையும் இது பிரதிபலிக்கின்றது. உயர்ந்தளவில் செறிவடைந்த தனியார் செல்வம் மற்றும் வங்கிக் கொடுகடன்களிற்கான எளிதான மற்றும் செலவு குறைந்த அணுகல் என்பன மூலதனச் சந்தை மீதான மந்தமான தன்மையிலான அக்கறைக்குப் பெரும்பாலும் முக்கிய காரணங்களாக அமைகின்றன. மறுபுறம், ஒட்டுமொத்தக் கொடுகடன் தொகுப்பினை முகாமைசெய்யக்கூடிய மட்டமொன்றில் பேணுவதற்கு நிறுவப்பட்ட, உயர்ந்தளவிலான தரத்திலான கூட்டாண்மைகள் வங்கிகளினை அனுமதிப்பதனால், வங்கிகள் அவற்றினை நோக்கியே சாய்ந்துள்ளன. இதன் பெறுபேறாக, கொடுகடனானது முதன்மைக் கடன்பெறுநர்களிடையே செறிவடைந்து காணப்பட்டு, நிதியளிப்புக்களினை அணுகுவதில் பாரியளவிலான தடைகளை எதிர்கொள்கின்ற சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளினைப் புறந்தள்ளுகின்றது.

சுருக்கமாகக் கூறினால், சந்தை மூலதனவாக்கலிற்கான இலங்கையின் உயர்ந்தளவிலான ஓய்வூதியச் சொத்துக்கள் விகிதமானது சமிக்ஞையிடுகின்றவாறு, மேலெண்ணில் உள்ள மிகையினையின்றி அதாவது, ஓய்வூதியச் சொத்துக்களின் அளவு, மாறாக அதன் கீழெண்ணில் உள்ள வரையறைகள் அதாவது, மூலதனச் சந்தை, பின்தங்கிய நிலையிலிருப்பதனையும் உள்நாட்டு மூலதனச் சந்தையினைப் பரவலடையச்செய்தல் மற்றும் விரிவுபடுத்தல் என்பன அத்தியாவசியமானதொரு படிமுறையாகக் காணப்படுகின்றன என்பதனையும் குறித்துக்காட்டுகின்றது. அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்களிலிருந்தான பங்கேற்பானது மூலதனச் சந்தையின் ஆழத்தினை மேம்படுத்தி, துறை ரீதியான பிரதிநிதித்துவத்தினை முன்னேற்றமடையச்செய்து, ஓய்வூதியச் சொத்து ஒதுக்கீட்டிற்கு மிகவும் சாதகமான சூழலொன்றினை உருவாக்கும். இது ஓய்வூதிய நிதியத்தின் நீண்டகாலச் செயலாற்றத்தினை நிலைநிறுத்துவதற்கு உதவுகின்ற வேளையில் உள்நாட்டு நிதியியல் சந்தையின் பரந்தளவிலான அபிவிருத்திக்கும் ஆதரவளிக்கும்.■



# அதிக ஆதாயங்கள், மறைந்திருக்கும் இடர்நேர்வுகள்: சட்டவிரோத நிதித் திட்டங்களை அடையாளம்காணல்

**திரு. சஞ்ஜீவ குருகே**
பிரதிப் பணிப்பாளர்
நிதியியல் உளவறிதல் பிரிவு

**அறிமுகம்**

அண்மைய ஆண்டுகளில், தொழில்நுட்பம் சார்ந்த புத்தாக்கம், டிஜிட்டல்மயப்படுத்தல் மற்றும் நிதியியல் சேவைகள் அதிகரித்தளவில் கிடைக்கப்பெறுதல் ஆகியவற்றினால் உந்தப்பட்டு நிதியியல் சூழலமைப்பு குறிப்பிடத்தக்க மாற்றமடைதலுக்குட்பட்டுள்ளது. புதிய முதலீட்டு உற்பத்திகள், இணையவழி வர்த்தகத் தளங்கள், செல்லிட வங்கித்தொழில் செயலிகள், டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகள் மற்றும் தொழில்நுட்பத்தினால் இயக்கப்படும் நிதியியல் தீர்வுகள் போன்றன தனிநபர்கள் தமது நிதியைச் சேமிப்பதற்கும், முதலீடுசெய்வதற்கும், கடன்பெறுவதற்கும் அத்துடன் முகாமைசெய்வதற்கும் முன்னருபோதுமில்லாததை விடவும் இலகுபடுத்தியுள்ளன. முன்னொரு காலத்தில் வங்கிகள் அல்லது நிதியியல் நிறுவனங்களுக்கு நேரில் சென்று பெறவேண்டியிருந்த நிதியியல் பணிகளை, இப்போது திறன் தொலைபேசிகள் மற்றும் இணைய இணைப்பினைக் கொண்ட சாதனங்கள் ஊடாக சில நிமிடங்களுக்குள் அணுக முடியும்.

இவ்வபிவிருத்திகள் நிதியியல் வாடிக்கையாளர்களுக்கு குறிப்பிடத்தக்களவிலான வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளன. பொதுமக்களுக்கான பரந்தளவிலான முதலீட்டுத் தெரிவுகள் தற்போது கிடைக்கப்பெற்று, தனிப்பட்டவர்கள் தமது சேமிப்புக்களை பன்முகப்படுத்துவதற்கும் பிள்ளைகளின் கல்வி, வீட்டுச் சொத்துரிமை, வியாபார அபிவிருத்தி, சொத்து உருவாக்கம் மற்றும் ஓய்வூதியத் திட்டமிடல் போன்ற நீண்டகால நிதியியல் இலக்குகளைத் தொடர்வதற்கும் இயலடையச்செய்கின்றது. அதேவேளை, டிஜிட்டல் நிதியியல் பணிகளின் விரிவாக்கமானது கிராமிய மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ளவர்கள் உள்ளடங்கலாக முன்னர் பணிகளைப் பெறாத சமூகங்களுக்கான நிதியியல் உற்பத்திகள் மற்றும் பணிகளுக்கான அனுகலை விரிவுபடுத்துவதனூடாக நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்தியுள்ளது.

நிதியியல் அறிவு முன்முயற்சிகளின் வளர்ச்சி, முதலீட்டு வாய்ப்புக்கள் பற்றிய அதிகரித்த பொதுமக்கள் விழிப்புணர்வு, மற்றும் முறைசார் நிதியியல் சந்தைகளின் விரிவாக்கம் போன்றனவும் முதலீட்டு நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு அதிகளவானோரை ஊக்குவித்துள்ளது. இதன் விளைவாக, தனிப்பட்டவர்கள் செல்வத்தைக் கட்டியெழுப்புவதற்கும் சட்டபூர்வமான முதலீட்டு வழிகளினூடாக தமது நிதியியல் நல்வாழ்வினை முன்னேற்றுவதற்கும் முன்னர் இருந்ததை விட இன்றைய காலத்தில் சிறந்த வாய்ப்புக்களைக் கொண்டுள்ளனர்.

எனினும், நிதியியல் பணிகளுக்கான அனுகலை விரிவுபடுத்தியுள்ள அதே அபிவிருத்திகள் புதிய இடர்நேர்வுகளையும் சவால்களையும் தோற்றுவித்துள்ளன.

சமூக ஊடகங்கள் மற்றும் டிஜிட்டல் தொடர்பூட்டல் தளங்கள் என்பவற்றினூடாக பரவுகின்ற தகவல்களின் வேகமானது, சாத்தியமான முதலீட்டாளர்களை மிகவும் இலகுவாகவும் அதிகரித்தளவிலும் சென்றடைவதற்கு மோசடியான தொழிற்படுத்துநர்களை இயலச்செய்துள்ளது. நேர்மையற்ற தனிநபர்களும் அமைப்புகளும், யதார்த்தமற்ற வருமானங்களையும் விரைவான வருவாய்களையும் வாக்குறுதியளிக்கின்ற அதிகாரமளிக்கப்படாத முதலீட்டுத் திட்டங்களை ஊக்குவிக்குவிப்பதற்காக தொழில்நுட்பம், இணையவழி சந்தைப்படுத்தல், மற்றும் தனிப்பட்ட வலையமைப்புகளைப் அதிகரித்தளவில் சுரண்டுகின்றனர்.

பொருளாதார நிச்சயமற்றதன்மை, அதிகரிக்கின்ற வாழ்க்கைச் செலவு , பணவீக்க அழுத்தங்கள் அல்லது பாரம்பரிய சேமிப்பு உற்பத்திகளில் குறைந்தளவிலான வருவாய் போன்ற காலப்பகுதிகளில், இவ்வாறான சலுகைகள் குறிப்பாகக் கவர்ச்சிகரமானவையாக அமையலாம். அத்துடன்,இணைந்த இடர்நேர்வுகளை முழுமையாகப் புரிந்துகொள்ளாமல், உத்தரவாதமளிக்கப்பட்ட வருவாய்கள், பிரத்தியேகமான வாய்ப்புக்கள் அல்லது விரைவான சொத்துத் திரட்டல் போன்ற வாக்குறுதிகளால் பல முதலீட்டாளர்கள் ஈர்க்கப்படலாம். துரதிர்ஷ்டவசமாக, மிகக் குறைந்த அல்லது எவ்வித இடர்நேர்வற்ற விதிவிலக்காக அதிகளவிலான வருவாய்களை வழங்கும் திட்டங்கள் சட்டபூர்வமானவையாகக் காணப்படுவது அரிது என்பதுடன், அவை பெரும்பாலும் பங்கேற்பாளர்களுக்குக் கணிசமானளவிலான நிதியியல் இழப்புக்களையே ஏற்படுத்துகின்றன என்பதையும் இலங்கையிலும் உலகளவிலும் ஏற்பட்டுள்ள அனுபவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

சட்டவிரோத நிதித் திட்டங்கள் அவற்றை சட்டபூர்வமான முதலீடுகள் என்ற போர்வையில் காண்பிக்கக்கூடிய இயலுமை அவற்றை ஆபத்திற்குள்ளாக்குகின்றது. அவை பெரும்பாலும் தூண்டுதலளிக்கக்கூடிய விளம்பரங்கள், சமூக ஊடக ஊக்குவிப்புக்கள் மற்றும் நண்பர்களின் உறவினர்களின் அல்லது சக ஊழியர்களின் தனிப்பட்ட பரிந்துரைகளில் தங்கியிருக்கின்றன. இந்தப் பரிந்துரைகள் நன்னோக்குடையவையாக இருக்கக் கூடும் என்ற போதிலும், அவை பாதுகாப்பு பற்றிய பொய்யான உணர்வொன்றைத் தோற்றுவிக்கக்கூடியன. இத்தகைய திட்டங்கள் முறிவடையும் போது, அவற்றின் சேதமானது நிதியியல் இழப்பிற்கு அப்பாற்பட்டு, உணர்வுபூர்வமான துயரம், உறவுகளில் விரிசல் மற்றும் நிதியியல் முறைமையில் நம்பிக்கையிழப்பு ஆகியவற்றையும் ஏற்படுத்துகின்றது.

எனவே, நிதியியல் வாடிக்கையாளர்களைப் பாதுகாத்தலானது ஒழுங்குமுறைப்படுத்துநர்களினதும் கொள்கை வகுப்பாளர்களினதும் முக்கிய முன்னுரிமையொன்றாக மாறியுள்ளது. பொதுமக்கள் விழிப்புணர்வு, கவனமான தீர்மானமெடுத்தல் மற்றும் உரிமம்பெற்றதும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டதுமான நிதியியல் நிறுவனங்களில் தங்கியிருத்தல் போன்றன அத்தியாவசியப் பாதுகாப்பு வழிமுறைகளாக உள்ளன. உண்மையான முதலீடுகள் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்வதன் மூலமும், எச்சரிக்கை அறிகுறிகளை ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலமும், நிதியியல் வாடிக்கையாளர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடிகின்ற அதேவேளை பாதுகாப்பானதும் தாக்குப்பிடிக்கும்தன்மைமிக்கதுமான நிதியியல் முறைமையொன்றுக்கும் பங்களிக்கின்றது.

## பல்வேறு தரப்பினர்களுக்கான முதலீட்டின் முக்கியத்துவம்

தனிநபர் நிதிகளை வலுப்படுத்துதல், வியாபார வளர்ச்சிக்கு ஆதரவளித்தல் மற்றும் தேசிய பொருளாதார அபிவிருத்தியை இயக்குதல் போன்றவற்றில் முதலீடு முக்கிய பங்கினை ஆற்றுகின்றது. தனிப்பட்டவர்களுக்கும் குடும்பங்களுக்குமான முதலீடு என்பது காலப்போக்கில் சேமிப்பினை அதிகரிப்பதற்கும், பணவீக்கத்திற்கு எதிராக அவற்றின் பெறுமதியை பாதுகாப்பதற்கும் பிரயோக ரீதியிலான வழியாகும். கல்வி, வீடமைப்பு, மருத்துவ பராமரிப்புத் தேவைகள் மற்றும் ஓய்வூதியக் காலத்தின் போதான வருமானப் பாதுகாப்பு போன்ற நீண்டகால இலக்குகளை அடைவதற்கு சிந்தனைமிக்க முதலீட்டுத் தீர்மானங்கள் உதவுகின்றன. அந்த வகையில், முதலீடானது சிறந்த தனிநபர் நிதியியல் திட்டமிடலின் மூலக்கல்லொன்றாக விளங்குகிறது.

வியாபாரங்களைப் பொறுத்தவரை, முதலீடானது வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாடுகளை

இயலச்செய்கின்றது. தொழில்நுட்பம், இயந்திரங்கள், ஆராய்ச்சி மற்றும் திறன்மிக்க தொழிலாளர்கள் போன்றவற்றில் முதலீடுசெய்யப்படும் நிதியங்கள், நிறுவனங்கள் அவற்றின் தொழிற்பாடுகளை விரிவுபடுத்தவும், சந்தையில் போட்டித்திறனுடன் காணப்படுவதற்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் இயலச்செய்கின்றன. இலங்கையில், வேளாண்மை, தயாரிப்பு, சுற்றுலா மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் முதலீடானது பொருளாதார நடவடிக்கை மற்றும் வாழ்வாதாரங்களுக்கு ஆதரவளிப்பதில் முக்கிய பங்கினை ஆற்றியுள்ளது.

நிதியியல் முறைமை மட்டத்தில், முதலீடானது ஒழுங்குமுறைப்படுத்தப்படும் வங்கிகள், மூலதனச் சந்தைகள் மற்றும் உரிமம்பெற்ற நிதியியல் நிறுவனங்கள் ஆகியவற்றினூடாக சேமிப்புக்களை உற்பத்தித்திறன் மிக்க பயன்பாடுகளுக்கு வழிப்படுத்துவதன் ஊடாக நிதியியல் இடையீட்டினை வலுப்படுத்துகின்றது. மேற்பார்வைசெய்யப்படும் நிறுவனங்களில் சேமிப்புக்கள் வைக்கப்படும் போது, நிதியியல் முறைமையின் மீதான நம்பகத்தன்மை மேம்படுத்தப்பட்டு, உறுதிப்பாட்டிற்கும் தாக்குப்பிடிக்கும்தன்மைக்கும் பங்களிப்புச்செய்கின்றது.

தேசிய மட்டத்தில், உற்பத்தித்திறன் மிக்க முதலீடானது உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்கு ஆதரவளிக்கின்றது. வலு, போக்குவரத்து, கல்வி மற்றும் மருத்துவ பராமரிப்பு போன்ற துறைகளில் முதலீடுகள், வாழ்க்கைத்தரங்களையும் நீண்டகால அபிவிருத்திப் பெறுபேறுகளையும் மேம்படுத்துகின்றன. முதலீடுகள் சட்டபூர்வமான மற்றும் நன்கு ஒழுங்குமுறைப்படுத்தப்படும் வழிகளினூடாகப் பாயும்போது, அவை ஒட்டுமொத்த சமூகத்திற்கும் பயனளிக்கும் வகையில் நம்பகத்தன்மை, வளர்ச்சி மற்றும் நிதியியல் உறுதிப்பாடு ஆகியவற்றின் சாதகமான சுழற்சியொன்றை உருவாக்குகின்றன.

## முதலீடொன்றைத் தெரிவுசெய்யும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய காரணிகள்

பொருத்தமான முதலீடொன்றைத் தெரிவுசெய்வதற்கு கவனமிக்க சிந்தனையும் தகவலறிந்த தீர்மானமும் அவசியமாகும். இடர்நேர்வுக்கும் வருவாய்க்குமிடையிலான தொடர்பை புரிந்துகொள்ளளல் மிக முக்கியமான கோட்பாடுகளில் ஒன்றாகும். சுருக்கமாகக் கூறுவதாயின், உயர்ந்தளவிலான சாத்தியமான வருவாய்கள் பொதுவாக அதிகளவிலான இடர்நேர்வுகளுடன் இணைந்துள்ளன. எனவே, “உத்தரவாதமளிக்கப்பட்ட” அல்லது “இடர்நேர்வற்ற” உயர்ந்தளவிலான ஆதாயங்கள் பற்றிய வாக்குறுதிகள், சட்டபூர்வமான நிதியியல் சந்தைகள் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதுடன் ஒத்திசைந்திருப்பதில்லை என்பதனால் இத்தகைய கோரிக்கைகள் எப்போதும் கரிசனையை ஏற்படுத்த வேண்டும்.

முதலீட்டு வாய்ப்பை வழங்குகின்ற நிறுவனத்தின் அல்லது தனிநபரின் சட்டபூர்வத்தன்மையை உறுதிப்படுத்துவது இன்றியமையாததாகும். இலங்கையில், வங்கித்தொழில், நிதி வியாபாரம் மற்றும் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல் போன்ற நிதியியல் நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற அதேவேளை மூலதனச் சந்தை நடவடிக்கைகள் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் கீழ் வருகின்றன. உரிமம்பெற்ற மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களுடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வது நிதியியல் வாடிக்கையாளர்களுக்கு முக்கியமானதொரு பாதுகாப்பு அரணை வழங்குகிறது.

வெளிப்படைத்தன்மை மற்றுமொரு முக்கிய காரணியாகும். நிதியங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன, வருவாய்கள் எவ்வாறு ஈட்டப்படுகின்றன, இதிலுள்ள இடர்நேர்வுகள் மற்றும் மீள்பெறுகைக்கான ஏதேனும் கட்டணங்கள் அல்லது நிபந்தனைகள் என்பவற்றை சட்டபூர்வமான முதலீடுகள் தெளிவாக விளக்குகின்றன. முதலீட்டு வாய்ப்பொன்று தெளிவான விளக்கங்களைத் தவிர்க்குமாயின், கேள்விகளை ஊக்கமிழக்கச்செய்யுமாயின், அல்லது சிக்கலான மற்றும் தெளிவற்ற மொழி நடையைக் கையாளுமாயின், எச்சரிக்கையுடன் செயற்படுவது அவசியமாகும்.

முதலீட்டாளர்கள் தங்களது வருமான உறுதிப்பாடு, சேமிப்பு இயலாற்றல் மற்றும் இடர்நேர்விற்கான சகிப்புத்தன்மை உள்ளடங்கலாக அவர்களின் சொந்த நிதியியல் சூழ்நிலைகளையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

குறுங்காலச் செலவுகள் அல்லது அவசரநிலைகளுக்குத் தேவைப்படும் நிதியங்கள், நீண்ட கால அல்லது திரவத்தன்மை முதலீடுகளில் முடக்கப்பட்டிருத்தல் கூடாது. தகைமைவாய்ந்த நிபுணர்களிடமிருந்து சுயாதீனமான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல் அல்லது ஒழுங்குமுறைப்படுத்துநர்களினால் வழங்கப்படும் உத்தியோகபூர்வ வழிகாட்டல்களைப் பின்பற்றுதல் என்பன இடர்நேர்வுகளை மேலும் குறைக்கலாம். ஒழுக்கமானதும் தகவலறிந்த அணுகுமுறையும் பாதுகாப்பான முதலீட்டின் அடித்தளமாக அமைகின்றன.

### அதிக ஆதாயம்: கவர்ச்சிகரமான வாக்குறுதி

விதிவிலக்காக அதிகளவிலான அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட ஆதாயங்கள் எனும் வாக்குறுதியானது, சட்டவிரோத நிதித் திட்டங்களினால் பயன்படுத்தப்படும் மிகவும் வலிமையான கருவிகளில் ஒன்றாக விளங்குகின்றது. பாரம்பரிய சேமிப்பு உற்பத்திகள் குறைந்தளவில் வெகுமதியளிக்கக்கூடியதாகத் தோன்றுகின்ற போது பொருளாதார நெருக்கடி நிலவும் காலப்பகுதிகளில் அல்லது குறைந்தளவிலான வட்டி வீதக் கட்டுப்பாட்டு முறைகளின் போது இவ்வாறான சலுகைகள் குறிப்பாக ஈர்க்கக்கூடியவையாக தோற்றம்பெறுகின்றன.

வெளிப்படையான வெற்றிக் கதைகளை காண்பிப்பதற்காக ஊக்குவிப்பாளர்கள், பெரும்பாலும் சமூக ஊடகங்கள், இணையவழி விளம்பரங்கள் மற்றும் நற்சான்றிதழ்களைப் பயன்படுத்துகின்றனர். ஆரம்பகாலப் பங்காளர்கள் இத்திட்டத்தின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவது போல தோன்றும் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளலாம். எவ்வாறாயினும், உண்மையில் இக்கொடுப்பனவுகள் உண்மையான முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்படாமல், அவ்வப்போது புதிய முதலீட்டாளர்களிடமிருந்து பெறப்படும் நிதியைக் கொண்டே வழங்கப்படுகின்றன.

நம்பகத்தன்மையானது பெரும்பாலும் தனிப்பட்ட வலையமைப்புகளின் ஊடாக மேலும் வலுப்படுத்தப்படுகின்றது. நண்பர்கள், உறவினர்கள், சக ஊழியர்கள் அல்லது ஒரே சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், தங்களுடைய சொந்த ஆரம்பகால அனுபவங்களின் அடிப்படையில் அது உண்மையானது என்று நம்பி, நல்லெண்ணத்துடன் அந்த முதலீட்டைப் பரிந்துரைக்கலாம். தனிப்பட்ட இத்தொடர்பானது, சந்தேகத்தினைக் கணிசமானளவில் குறைப்பதுடன், தனிநபர்கள் முறையான உறுதிப்படுத்தல்களை மேற்கொள்வதிலிருந்தோ அல்லது சுயாதீனமான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதிலிருந்தோ அவர்களைத் தடுக்கலாம். உள்நாட்டிலும் பன்னாட்டு ரீதியிலும் அவதானிக்கப்பட்ட பல சந்தர்ப்பங்களில், திட்டங்கள் தோல்வியடைகின்ற போது இவ்வாறான நம்பிக்கையின் அடிப்படையிலான ஊக்குவிப்பு ஒட்டுமொத்த சமூகங்களும் பாதிக்கப்படுவதற்கு வழிவகுத்துள்ளன.

சட்டபூர்வமான நிதியியல் சந்தைகளில், சந்தை நிபந்தனைகள், வியாபாரச் செயலாற்றல், வட்டி வீத அசைவுகள் மற்றும் பரந்த பொருளாதார அபிவிருத்திகள் உள்ளடங்கலான பலதரப்பட்ட காரணிகளினால் முதலீட்டு ஆதாயங்கள் வடிவமைக்கப்படுகின்றன என்பதை அடையாளம்காண்பது முக்கியமானதாகும். நன்கு முகாமைசெய்யப்பட்டதும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டதுமான முதலீடுகள் கூட, தளம்பல்களுக்கும் குறைந்த வருவாய்களைக் கொண்ட காலப்பகுதிகளுக்கும் உட்பட்டுக் காணப்படுகின்றன. இதன் விளைவாக, முதலீட்டாளர்களைக் குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளுக்கு ஆளாக்காமல், எந்தவொரு சட்டபூர்வமான முதலீடும் தொடர்ச்சியாக அதிக, நிலையான மற்றும் உத்தரவாதமளிக்கப்பட்ட வருவாய்களை வழங்க முடியாது. மிகக் குறைந்த அல்லது எவ்வித இடர்நேர்வுமின்றி அசாதாரணமான அதிக ஆதாயங்கள் பற்றிய வாக்குறுதிகள், சட்டவிரோத அல்லது மோசடி நடவடிக்கையின் வலுவானதொரு குறிகாட்டியாகும் என இலங்கை மத்திய வங்கி உள்ளிட்ட ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபைகள் பலமுறை எச்சரித்துள்ளன. எனவே, நிதியியல் வாடிக்கையாளர்கள் இவ்வாறான வாக்குறுதிகளை வாய்ப்புக்களாகக் கருதாமல், கவனமான பரிசீலனை மற்றும் எச்சரிக்கையை அவசியப்படுத்தும் தெளிவான எச்சரிக்கைச் சமிக்ஞைகளாகக் கருத வேண்டும்.

### வாக்குறுதிகளுக்குப் பின்னால் மறைந்திருக்கும் இடர்நேர்வுகள்

சட்டவிரோத நிதித் திட்டங்களின் கவர்ச்சிகரமான வாக்குறுதிகளுக்குப் பின்னால் பாரதூரமான மற்றும்

பெரும்பாலும் மறைந்திருக்கும் இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. முதலீடுசெய்யப்பட்ட மூலதனத்தை இழப்பதே இவற்றில் மிக முக்கியமான இடர்நேர்வாகும். பொன்சி மற்றும் பிரமிட் கட்டமைப்பு போன்ற திட்டங்கள், புதிய நிதியங்களின் தொடர்ச்சியான உட்பாய்ச்சல்களில் தங்கியுள்ளன. இவ்வுட்பாய்ச்சல்கள் மெதுவடைகின்ற அல்லது நிறுத்தப்படும் போது, இத்திட்டம் முறிவடைந்து, பெரும்பாலான முதலீட்டாளர்களுக்குப் பாரிய இழப்புக்களை ஏற்படுத்துகின்றது.

ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களின் நிதியியல் உற்பத்திகளைப் போலன்றி, சட்டவிரோத திட்டங்களில் முதலீடுசெய்யப்படும் பணமானது பொதுவாக ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையின் பாதுகாப்பிற்கு அப்பாற்பட்டுக் காணப்படும். இத்திட்டம் தோல்வியடையுமாயின், இழப்பீட்டுப் பொறிமுறைகள், வைப்புக் காப்புறுதி அல்லது சட்டரீதியான பரிகாரங்கள் போன்றவற்றிற்கான அணுகல் முதலீட்டாளர்களுக்கு காணப்படாது என்பதே இதன் பொருளாகும். இவ்வாறான திட்டங்களின் மூலம் திரட்டப்படும் நிதியங்கள், உண்மையான ஆதாயத்தினை ஈட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதற்குப் பதிலாக பெரும்பாலும் ஊக்குவிப்பாளர்களினால் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன, தனிப்பட்ட இலாபத்திற்காகத் திசைதிருப்பப்படுகின்றன அல்லது ஆரம்பகால முதலீட்டாளர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்காக மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றன. நிதியங்களின் இத்தகைய துஷ்பிரயோகமானது நிதியியல் முறைமையின் மீதான நம்பிக்கையைக் குறைப்பதுடன், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை ஏன் மிக முக்கியமானவை என்பதை குறித்துக்காட்டுகின்றது.

இதன் பாதிப்பானது நிதியியல் ரீதியானதாக மாத்திரம் அமைந்திராது. குறிப்பாக பணம் கடனாகப் பெறப்பட்டு அல்லது ஒன்றுதிரட்டப்படுமாயின், பாதிக்கப்பட்டவர்கள் மன அழுத்தம், பதற்றம் மற்றும் உறவுகள் பாதிப்படைதல் போன்றவற்றை அனுபவிக்க நேரிடலாம். சமூக ரீதியிலான சங்கடங்கள் இவ்வாறான மோசடிகள் பற்றி முறையிடலை ஊக்கமிழக்கச்செய்து, மோசடி நடவடிக்கைகள் தொடர்வதற்கும் வழிவகுக்கின்றது. இவ்விடர்நேர்வுகள், விழிப்பு மற்றும் உரிமம்பெற்ற நிதியியல் நிறுவனங்கள் மீது சார்ந்திருப்பதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றன.

### சட்டவிரோத நிதித் திட்டங்களை அடையாளம்காணல்

சட்டவிரோத நிதித் திட்டங்களை ஆரம்பத்திலேயே அடையாளம்காணல் முதலீட்டாளர்களின் பணத்தைப் பாதுகாப்பதற்கு இன்றியமையாததாகும். குறிப்பாக, வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்லும் காலப்பகுதிகளில் அல்லது சாதாரண சேமிப்புகளுக்கான வருமானம் குறைவாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில், இத்தகைய திட்டங்கள் விரைவான மற்றும் உயர்ந்தளவிலான ஆதாயங்களை வாக்குறுதியளித்து, பெரும்பாலும் கவர்ச்சிகரமானவையாகக் காட்சியளிக்கின்றன. எனினும், இவற்றில் பாரதூரமான இடர்நேர்வுகள் மறைந்து காணப்படுவதுடன், அடிக்கடி நிதியியல் இழப்புகளுக்கே இட்டுச் செல்கின்றன.

முக்கிய எச்சரிக்கை அறிகுறிகளானவை உண்மையான நிதியியல் சந்தைகளில் யதார்த்தமற்றவையாகக் காணப்படுகின்ற குறைந்த அல்லது இடர்நேர்வற்ற உத்தரவாதமளிக்கப்பட்ட அல்லது அசாதாரணமான அதிக வருவாய்களைக் கொண்ட வாக்குறுதிகளை உள்ளடக்குகின்றன. ஆரம்பகாலப் பங்காளர்களுக்குக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக புதிய நிதியங்களில் தங்கியிருந்து, இறுதியில் முறிவடையும் பிரமிட் மற்றும் பொன்சி திட்டங்களின் பொதுவான அம்சமான, புதிய முதலீட்டாளர்களை ஆட்சேர்ப்பதற்கான அழுத்தம் மற்றொரு முக்கிய எச்சரிக்கை அறிகுறியாகக் காணப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கி அல்லது இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு போன்ற ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபைகளுடன் முறையான உரிமமளிப்பு அல்லது பதிவினைக் கொண்டிராமை இவை சட்டவிரோதமானவை என்பதைக் காட்டும் வலுவான குறிகாட்டியாகும்.

மோசடிக்காரர்கள் பெரும்பாலும் தெளிவற்ற அல்லது சிக்கலான விளக்கங்களைப் பயன்படுத்துவதுடன் அவசரத்தன்மை அல்லது இரகசியத்தன்மையை ஏற்படுத்தி, சுயாதீனமான ஆலோசனையை ஊக்கமிழக்கச்செய்வதுடன் முதலீடுசெய்யப்பட்ட நிதியங்களை மீளப்பெறுவதனை சிரமமாக்குகின்றனர். இலங்கையிலுள்ள ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபைகள் இத்தகைய

திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு தொடர்ச்சியாக எச்சரிக்கைவிடுத்துள்ளதுடன், முதலீடுசெய்வதற்கு முன்னர் அதன் சட்டபூர்வத்தன்மையை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகின்றன. தகவலறிந்து, விழிப்புடன் இருத்தல், இவ்வெச்சரிக்கை அறிகுறிகள் குறித்து அவதானமாக செயற்படல் போன்றன தனிப்பட்ட சேமிப்புக்களைப் பாதுகாப்பதற்கு உதவுவதுடன், பாதுகாப்பான மற்றும் மிகவும் நம்பகமான நிதியியல் முறைமையொன்றுக்கும் ஆதரவளிக்கின்றன.

## சட்டவிரோத நிதித் திட்டங்களின் பாதகமான விளைவுகள்

சட்டவிரோத நிதித் திட்டங்களில் பங்கேற்றல் கடுமையான மற்றும் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். பலர் தங்களது வாழ்நாள் சேமிப்புக்களை இழப்பதுடன், சிலர் முதலீடுசெய்வதற்காகக் கடன்களைப் பெறுவதன் மூலமாக அல்லது அத்தியாவசிய சொத்துக்களை விற்பனைசெய்வதன் மூலமாகப் பாரிய படுகடன்களுக்குள்ளாகின்றனர். நிதியங்களை மீளப்பெறுதல் பெரும்பாலும் கடினமானதாகவோ அல்லது சாத்தியமற்றதொன்றாகவோ காணப்படும்.

தனிப்பட்ட நிதியியல் இழப்பிற்கு மேலதிகமாக, சட்டவிரோத திட்டங்களில் ஈடுபடுதல் சட்டரீதியான விளைவுகளையும் ஏற்படுத்தலாம். இத்தகைய திட்டங்களை ஊக்குவிப்பவர்கள் மற்றும் அதில் முனைப்புடன் பங்கேற்பவர்கள் நிதித்தொழில் சட்டம், வங்கித்தொழில் சட்டம் அல்லது நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம் போன்ற இலங்கைச் சட்டங்களின் கீழ் வழக்கத்தொடரல்கள், அபராதங்கள் அல்லது ஏனைய தண்டப்பணங்களுக்கு உள்ளாக நேரிடலாம். ஊக்குவிப்பாளர்களாக இல்லாதிருந்த போதிலும், ஒழுங்குமுறைப்படுத்தப்படாத அல்லது அங்கீகாரமளிக்கப்படாத திட்டங்களில் தெரிந்தே பங்கேற்பவர்கள் கூட உரிமம்பெற்ற மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களுடன் மாத்திரமே கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி, சட்ட அமுலாக்கல் அதிகாரசபைகளின் கடுமையான விசாரணைக்கு முகங்கொடுக்க நேரிடலாம்.

சட்டவிரோத நிதித் திட்டங்களினால் ஏற்படும் தீங்கு தனிநபர்களுக்கு வரையறுக்கப்பட்டதல்ல. நிதியியல் இழப்புகளால் ஏற்படும் மனஅழுத்தம் மற்றும் பதற்ற நிலைமைகளால் குடும்பங்களும் சமூகக் கட்டமைப்புக்களும் பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன. கூட்டாக முதலீடுசெய்யப்பட்ட பணம் இழக்கப்படுமாயின், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் சக ஊழியர்களுக்கு இடையிலான நம்பிக்கை பாதிக்கப்படக்கூடும். இதற்கு அப்பால், பரந்த பொருளாதாரமும் இதனால் பாதிக்கப்படலாம். இத்தகைய சட்டவிரோத திட்டங்களில் பரந்த பங்கேற்பு, நிதியியல் முறைமையில் பொதுமக்களின் நம்பிக்கையைக் குறைக்கக்கூடும் என்பதுடன், சட்டபூர்வ முதலீடுகளை ஊக்கமிழக்கச்செய்து, உற்பத்தித்திறன்மிக்கதும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டதுமான நிதியியல் செயற்பாடுகளிலிருந்து நிதியங்களைத் திசைதிருப்புவதன் மூலம் சந்தைகளை உறுதியற்றதாக்கக்கூடும். இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் இடம்பெற்ற வரலாற்று ரீதியான உதாரணங்கள், பிரமிட் மற்றும் பொன்சி திட்டங்களின் பெரியளவிலான முறிவடைதலானது தனிநபர்களை வங்குரோத்துநிலையடையச்செய்வது மாத்திரமன்றி, பொதுமக்களின் நம்பிக்கையையும் சிதைத்து, உறுதியான ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வுப் பிரசாரங்களை ஊக்குவிக்கின்றன என்பதைக் காண்பித்துள்ளன.

## சட்டவிரோத நிதித் திட்டங்களை ஒழிப்பதன் முக்கியத்துவம்

தனிப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்கு மாத்திரமன்றி, பரந்த நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு மற்றும் நம்பகத்தன்மையைப் பாதுகாப்பதற்கும் சட்டவிரோத நிதித் திட்டங்களை ஒழிப்பது மிக அவசியமானதாகும். இத்தகைய திட்டங்கள் பெரும்பாலும் வரையறுக்கப்பட்ட நிதியியல் அறிவு அல்லது முறைசார் வங்கித்தொழில் மற்றும் முதலீட்டுப் பணிகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகலைக் கொண்டுள்ள தனிநபர்களையும் குடும்பங்களையுமே இலக்காகக்கொள்கின்றன. இத்தகைய பாதிக்கப்படும்தன்மைகளை சுரண்டுவதன் ஊடாக, சட்டவிரோத திட்டங்கள் தனிப்பட்ட சேமிப்புகளை விரைவாகச்

சுரண்டக்கூடும் என்பதுடன் குடும்பங்களை நிதியியல் நெருக்கடிக்குள் தள்ளிவிடுகின்றன. நிதியியல் சூழலிருந்து இத்தகைய திட்டங்களை நீக்குதல் இச்சுரண்டல்களைத் தடுக்க உதவுவதுடன், பொதுமக்களின் சேமிப்புக்கள் பாதுகாப்பாகவும் உற்பத்தித்திறன்மிக்க வழிகளிலும் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்கின்றது.

சட்டவிரோத திட்டங்களின் பிரசன்னம் சட்டபூர்வ நிதியியல் நிறுவனங்கள் மீதான நம்பிக்கையையும் குறைக்கின்றது. அங்கீகாரமளிக்கப்படாத அல்லது மோசடித் தொழிற்பாடுளினால் மக்கள் பணத்தை இழக்கின்ற வேளை, அவர்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் வங்கிகள், நிதிக் கம்பனிகள் அல்லது உரிமம்பெற்ற முதலீட்டு நிதியங்கள் ஊடாக முதலீடுசெய்வதற்கோ அல்லது சேமிப்பதற்கோ எச்சரிக்கையாக இருக்கலாம். இத்தயக்கமானது, பொருளாதாரத்தின் உற்பத்தித்திறன்மிக்க துறைகளுக்கான மூலதனப் பாய்ச்சலை பலவீனப்படுத்தி, பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றது. சட்டவிரோத நிதித் திட்டங்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமும், ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களின் நிதியியல் உற்பத்திகளை ஊக்குவிப்பதன் மூலமும், சேமிப்புக்கள் தனிநபர்களுக்கும் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கும் பயனளிக்கும் சட்டபூர்வமான, உற்பத்தித்திறன்மிக்க முதலீடுகளில் ஈடுபடுத்தப்படுவதை அதிகாரிகள் உறுதிப்படுத்துகின்றனர்.

நெறிமுறைசார்ந்த நிதியியல் கலாசாரத்தினை ஊக்குவித்தல் பகிரப்பட்டதொரு பொறுப்பாகக் காணப்படுகின்றது. ஒழுங்குமுறைப்படுத்துனர்கள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகிய அனைவரும் சட்டவிரோதத் திட்டங்கள் பரவுவதனைத் தடுப்பதற்கான வகிபாகத்தினைக் கொண்டுள்ளனர். எச்சரிக்கை அறிகுறிகள் மற்றும் பாதுகாப்பான முதலீட்டு நடைமுறைகள் என்பவற்றை எடுத்துக்காட்டி, மோசடியான திட்டங்களின் இடர்நேர்வுகள் பற்றி வாடிக்கையாளர்களை அறிவூட்டுவதற்கான பொதுமக்கள் விழிப்பூட்டல் பிரசாரங்கள் அவசியமாகும். வலுவான ஒழுங்குமுறைப்படுத்தல் அமுலாக்கல், முகவராண்மைக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள் பற்றி உரிய வேளையில் அறிக்கையிடல் என்பன தடுப்பினை மேலும் வலுப்படுத்தி, மோசடித் தொழிற்பாட்டாளர்கள் பொதுமக்களினை சுரண்டுவதனை கடினமாக்குகின்றது.

இலங்கை மத்திய வங்கியானது, ஏனைய ஒழுங்குமுறைப்படுனர் மற்றும் சட்ட அமுலாக்கல் முகவராண்மைகளுடன் இணைந்து, நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பிற்கான முக்கிய கருவிகளாக விழிப்புணர்வையும் தகவலறிந்த தீர்மானம் எடுத்தலையும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

சட்டவிரோத நிதியியல் திட்டங்களின் இடர்நேர்வுகளைப் புரிந்துகொள்ளல், நிதியியல் நிறுவனங்களின் சட்டபூர்வத்தன்மையை உறுதிப்படுத்துதல் மற்றும் கவனமிக்க முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளல் ஆகியவற்றின் ஊடாக நிதியியல் வாடிக்கையாளர்களால் அவர்களின் சொந்தச் சேமிப்புகளைப் பாதுகாத்துக்கொள்ள முடிகின்ற அதேவேளை, பாதுகாப்பான, மிகவும் நம்பகமான மற்றும் தாக்குப்பிடிக்கும்தன்மைமிக்க நிதியியல் முறைமையொன்றுக்கும் பங்களிப்புச்செய்கின்றனர். இறுதியாக, சட்டவிரோத நிதித் திட்டங்களை ஒழித்தலானது தனிநபரின் நல்வாழ்வுக்கு மாத்திரமன்றி, இலங்கையின் நிதியியல் சூழலமைப்பின் நீண்டகால ஆரோக்கியத்திற்கும் உறுதிப்பாட்டிற்கும் ஆதரவளிக்கின்றது.

## முடிவுரை

உயர் வருவாய்கள் பற்றிய வாக்குறுதியானது, குறிப்பாக பொருளாதார நிச்சயமற்றதன்மை, அதிகரிக்கின்ற வாழ்க்கைச் செலவு அல்லது குறைந்தளவிலான வட்டி வீதங்களைக் கொண்ட காலப்பகுதிகளில் இயல்பாகவே ஈர்க்கக்கூடியதாகக் காணப்படும். எவ்வாறாயினும், இத்தகைய வாக்குறுதிகள் பெரும்பாலும் தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குப் பேரழிவுமிக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய கணிசமான இடர்நேர்வுகளை மறைக்கின்றன. வழமைக்கு மாறாக உயர்ந்தளவிலான அல்லது குறைந்த இடர்நேர்வு அல்லது இடர்நேர்வின்றி உத்தரவாதமளிக்கப்பட்ட ஆதாயங்களை வழங்குகின்ற முதலீட்டு வாய்ப்புக்கள், இறுதியில் முறிவடைந்து முதலீட்டாளர்களைப் பெருமளவிலான நிதியியல் இழப்புகளுக்கு உள்ளாக்கும் "பொன்சி" மற்றும் "பிரமிட்" தொழிற்பாடுகளை உள்ளடக்கிய சட்டவிரோத நிதித்

திட்டங்களுடன் அடிக்கடி இணைந்தவையாக உள்ளன என்பதை இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள அனுபவம் மீண்டும் மீண்டும் எடுத்துக்காட்டியுள்ளது.

இத்தகைய திட்டங்களிலிருந்து ஒருவரைப் பாதுகாத்துக்கொள்வதற்கு விழிப்பூட்டல், விழிப்பாகவிருத்தல் மற்றும் தகவலறிந்த தீர்மானமெடுத்தல் என்பன அவசியமாகும். நிதியங்களைப் பயன்படுத்துதல் தொடர்பான வெளிப்படைத்தன்மை, உரிய உரிமமளித்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை, அத்துடன் இடர்நேர்விற்கும் வருவாய்க்குமிடையிலான யதார்த்தமான தொடர்பு உள்ளடங்கலாக சட்டபூர்வ முதலீடுகளின் சிறப்பம்சங்களைப் புரிந்துகொள்வதன் மூலம் நிதியியல் வாடிக்கையாளர்கள் மோசடிக்கு ஆளாவதைக் குறைத்துக் கொள்ளலாம். உத்தரவாதமளிக்கப்பட்ட இலாபங்கள் பற்றிய வாக்குறுதிகள், புதிய பங்காளர்களை ஆட்சேர்ப்பதற்கான அழுத்தம், முதலீட்டு நடவடிக்கைளைச் சூழ்ந்துள்ள இரகசியத்தன்மை மற்றும் நிதியங்களை மீளப்பெற்றுக்கொள்வதிலுள்ள சிரமங்கள் போன்ற பொதுவான எச்சரிக்கை அறிகுறிகளை அடையாளம்காணல், தனிநபர்கள் நிதியியல் மோசடியினால் பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கு உதவலாம். உரிமம்பெற்ற நிதியியல் நிறுவனங்கள், தகைமைவாய்ந்த தொழில்சார் நிபுணர்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி, இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு போன்ற உத்தியோகபூர்வ மூலங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், ஏமாற்று முதலீட்டு சலுகைகளுக்கு எதிரான முக்கியமான பாதுகாப்பொன்றை வழங்குகின்றது.

முன்மதிமிக்க முதலீட்டுத் தீர்மானங்கள் தனிப்பட்ட செல்வத்தைப் பாதுகாப்பது மட்டுமன்றி, ஒட்டுமொத்த நிதியியல் முறைமையின் வலிமை, உறுதிப்பாடு மற்றும் நேர்மை ஆகியவற்றிற்கும் பங்களிக்கின்றன. சேமிப்புக்கள், ஒழுங்குமுறைப்படுத்தப்படும் மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த முதலீட்டு வழிகளின் ஊடாக வழிப்படுத்தப்படும் போது, அவை பொருளாதார வளர்ச்சி, வியாபார மேம்பாடு, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் நீண்டகால தேசிய சுபீட்சம் ஆகியவற்றிற்கு ஆதரவளிக்கின்றன. இதற்கு மாறாக, சட்டவிரோத நிதியியல் திட்டங்கள் பொதுமக்களின் நம்பிக்கையைச் சீர்குலைத்து, உற்பத்தித்திறன்மிக்க பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து வளங்களை தூ ரப்படுத்தி, நிதியியல் உறுதிப்பாட்டினைக் குறைக்கின்றது..

நிதியியல் உற்பத்திகளும் முதலீட்டு வாய்ப்புக்களும் தொடர்ந்து பரிணாம வளர்ச்சியடைந்து வருவதனால், நிதியியல்சார் அறிவு என்பது மோசடிக்கெதிரான மிகவும் வினைத்திறன்மிக்க பாதுகாப்பு அரண்களுள் ஒன்றாக விளங்குகின்றது. சட்டபூர்வமான சொத்து உருவாக்கமானது தகவலறிந்த தீர்மானங்கள், யதார்த்தமான எதிர்பார்ப்புக்கள் மற்றும் இடர்நேர்வுகள் பற்றிய உன்னிப்பான மதிப்பீடு ஆகியவற்றின் மீது கட்டமைக்கப்படுகின்றது என்பதை ஒவ்வொரு முதலீட்டாளரும் நினைவிற்கொள்ள வேண்டும். “ஒரு முதலீட்டு வாய்ப்பு நம்ப முடியாத அளவிற்கு மிகச் சிறந்ததாகத் தோன்றுமாயின், அது மோசடியாக இருக்க அதிகம் வாய்ப்புள்ளது” என்பது எளிமையானதாகவும் அதேவேளை நிலைத்திருக்கின்ற அதிகம் பொருத்தமான கொள்கையாகவும் காணப்படுகிறது. எச்சரிக்கையுடன் செயற்படல், உரியவறான விழிப்புக்கவனத்தினை மேற்கொள்ளல், நம்பகமான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிதியியல் வழிகளில் தங்கியிருந்தல் போன்றவற்றின் ஊடாக, தனிநபர்கள் தங்களது நிதியியல் எதிர்காலத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடிகின்ற அதேவேளை, அனைவருக்கும் பாதுகாப்பான, அதிக நெகிழ்ச்சித்தன்மைமிக்க மற்றும் அதிக நம்பகத்தன்மைவாய்ந்த நிதியியல் முறைமையொன்றை உருவாக்குவதற்கும் பங்களிக்கின்றனர்■